சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 22 28-6-'42

Price 2 Annas

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சித்ரமும் சிருங்காரமும்

இந்த மாதம் 7-ம் தேதி முதல் கஸீனே தியேட்டரில் "கான் வித் தி விண்ட்" என்ற உயர்தர மெட்ரோ கோல்ட்வின் படம் காட்டப்படும்: விவியன் லே, ஒலீவியா டி ஹாவிலண்ட், க்ளார்க் கேபிள், லெஸ்லி ஹவார்ட் ஆகிய பிரபல நடிகர்கள் நடிக்கும் படம் இது. சினிமாப்பட சரித்திரத்தில் இதற்கு உரிய ஸ்தானம் மஹத்தானது. படத்தைப் பார்த்த பின்பு தான் அதன் மேன்மை புலப்படும்.

"அர்ஜண்டைனில் அவர்கள் சந்தித்தனர்" என்ற படத்தில் ஒரு காட்சி.

"காற்றுடன் போயிற்று"

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு அசாதாரண சந்தர்ப்பம் சம்பவிக்கிறது. அதை அலக்ஷியம் செய்ய முடியாது. இப்போது இத்தகைய சம்பவம் சினிமா ரசிகர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது காற்றுடன் போயிற்று. என்ற படத்தைப் பார்த்துதான் அந்த சந்தர்ப்பம்! இந்தப் படம் நகரில் கஸினோ தியேட்டரில் 7-ம்தேதி முதல் ஒரு வாரம் காட்டப்படும்.

டேவிட் ஸெல்ஸ்னிக் தயாரித்திருக்கும். "காற்றுடன் போயிற்று" (Gone with the wind) என்ற படத்திற்கு சமமாக வேறு ஒன்றையும் எடுத்துக் காட்டமுடியாது என்பது சினிமா நிபுணர்களின் கருத்து; இந்தப் படத்தில் மார்கரட் மிச்சல் மேற்படி பெயருடன் எழுதிய நவீனம் சிறிதும் வழுவாமல் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அட்லாண்டாவிலும் அதைச் சுற்றியும் நடந்த அமெரிக்க உள்நாட்டுச் சண்டை மிகுந்த திறமையுடன் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. புத்தகத்திற்கு எவ்வளவு பிரசித்தி கிடைத்ததோ அதே பிரசித்தி இந்தப்படத்திற்கும் வாய்த்திருக்கிறது. ஸ்கார்லட் ஒஹாரா, முதலான எல்லா வேஷங்களிலும் நடிகர்கள் மிகுந்த சாமர்த்தியத்தைக் காட்டியுள்ளனர். படத்தில் சுமார் ஒரு நூற்றுண்டுக்கு முன்பு நடந்த சம்பவத்தை நாம் நேரில் தத்ரூபம் காணுவது போலவே இருக்கிறது. சுருங்கச் சொன்னால் இப்படம் உயிர் பெற்றிருக்கிறது எனலாம்.

ஸ்கார்லட் வேஷத்தில் இங்கிலீஷ் நடிகையான விவியன் லே காட்டியிருக்கும் நடிப்பு மிகவும் ஆச்சர்யகரமானது. வேறு எந்த ஹாலிவுட் நடிகையோ அல்லது நியூயார்க் நடிகையோ இந்த கதா பாத்திரத்தில் இத்தகைய விதத்தில் நடித்திருக்க முடியாது என்று முதன் முதல் இப்படம் அமெரிக்காவில் காட்டப்பட்டபோது அங்கு பல பிரபல பத்திரிகைகள் எழுதின. விவியன் லே நடித்திருப்பதைப் பார்க்கும் போது ஸ்கார்லட் தான் வந்து விட்டாளோ என்ற சந்தேகம் எழும்பும்படி இருக்கிறதென்பது பலரதுகருத்து. நல்லஅழகு: மேதை அதிகம் இல்லை; ஆயினும் பெண்மையின் வனப்பு மிகுந்தவள். ஸ்கார்லட் வேஷத்தில் மேற்கண்ட குணதிசயங்களைக் காட்டுவதுடன், அவளது முன்கோபம், சுயநலபுத்தி, பொய் பேசும் ஸ்வபாவம் முதலிய அம்சங்களையும் விவியன் லே நன்கு நிரூபித்திருக்கிறார். படம் பூராவும் ஸ்கார்லட்டைப் பற்றித்தான்; படத்தில் ஸ்கார்லட்டின் தோஷங்களை மறைத்து வைக்க கொஞ்சம்கூட முயற்சி செய்யப்படவில்லை. குதூஹலமான ஆரம்பம் முதல் விசனகரமான முடிவு வரை ஸ்கார்லட் தான் இந்தப் படத்தில் பிரதானம்.

இந்தப் படத்தில் மனுஷ்ய உணர்ச்சி அதிக இடம் பெற்றிருக்கின்றது; சம்பவங்கள் உண்மையானவை; ஆக்கம் நிரம்பியவை படத்தில் துக்ககரமான சம்பவங்களை நாம் பார்க்கும்போது நம்முன் பெருந் தன்மையும் பரிதாபமும் மேலிட்டு நம் அனுதாபத்தை எழுப்புகின்றன; மனுஷ்ய ஸ்வபாவம் எத்தகையது என்பதை நாம் காணமுடிகிறது; அறிந்து அனுபவிக்கவும் சாத்தியமாகிறது. ஹாஸ்யமான சந்தர்ப்பங்கள் வரும் போது நாமும் சேர்ந்து இன்புறுகிறோம்.

விவியன்லே தவிர இப்படத்தில் மற்ற நடிகர்களும் மிகவும் சிறப்பாக நடித்திருக்கின்றனர். அது விக்டர் ப்ளெமிங்கின் உயர்வையே கோஷிக்கிறது. மெலனி ஹாமில்டன் வேஷத்தில் நடிக்கும் ஒலிவியாடி ஹாவிலண்ட் காட்டும் நடிப்பு விவியன் லே காட்டும் திறமைக்குக் கூடியமட்டும் சமமாக இருக்கிறது. ரெட் பட்லராக க்ளார்க் கேபிள் வழக்கம்போல் தமது உன்னத திறமையை நிதர்சனமாக்கி யிருக்கிறார். ஆஷ்லி வில்க்ஸ் வேஷத்தில் லெஸ்லி ஹவார்ட் நடித்திருப்பதும் மிகவும் சிலாகிக்கத் தக்கதாக இருக்கிறது.

இந்தப் படப் பிடிப்புக்காக ஸெல்ஸ்னிக்கும் அவரது கூட்டாளிகளும் 4,500,000 டாலர் செலவழித்ததாகத் தெரிகிறது. படத்தைப் பார்த்தபின் இவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டதில் ஒருவருக்கும் ஆச்சர்யமிருக்காது. படம் பூராவும் இயற்கை வர்ணத்திலேயே தயாரிக்கப்பட்டிருக்கிறது, படப் பிடிப்புக்கு சுமார் 3½ வருஷகாலம் பிடித்தது, சரித்திரகாலத்தில் இருந்த நடையுடைபாவனைகளை அப்படியே காண்பிப்பதில் இருந்த சிரத்தை காரணமாக இப்படம் குற்றம் குறையின்றி சோபிக்கிறது.

இந்தப்படம் சுமார் நான்கு மணி நேரம் ஓடுகிறது. படத்தைப் பார்த்துக்கொண்டு போகப் போக, ஆவல் வளருகிறதேயொழிய அலுப்பு ஏற்படுவதில்லை. மிகவும் ஆச்சர்யகரமானபடம். ஒரு நிமிஷமாவது நமக்கு அதிருப்தி தட்டுவது கிடையாது.

"அர்ஜண்டினவில் சந்தித்தனர்"

ப்யூனஸ் எயர்ஸ் எனுமிடத்தில் குதிரைப் பந்தயம் நடக்கும் இடம்: ஒரு பெரிய பண்டிகை தடபுடல் அர்ஜண்டைனில் பெரிய செல்வத்திற்கு வார்சாக வரவிருக்கும் லாலிட்டாவை டிம் கெல்லி சந்திக்கிறன்: லாலிட்டா ஆர்பாட்டக்காரி: மைதானத்தில் சர்வதேச நல்லுணர்ச்சி நிதிக்காக அவள் சிகரெட்டுகளை விற்றுக் கொண்டிருக்கிறள். அவளுக்கு ஆல்பெர்டோ டெல்மாண்டே என்று நண்பன் ஒருவன் உண்டு. அவளை நேரில் பார்க்கும்போதெல்லாம் தன்னை மணக்கும்படி அவளை அவன் வற்புறுத்துவது வழக்கம்.

டெக்ஸாஸ் எனுமிடத்தில் பிரபல எண்ணெய் வியாபாரியான ஜார்ஜ் ஹேஸ்டிங் என்பவர் கீழ் டிம் கெல்லியும், ட்யூக் பெர்ரலும் ஊழியம் செய்கின்றனர். ட்யூக்கிடம் அவனது எஜமானன் சில பந்தயக் குதிரைகளை ஒப்படைத்திருக்கிறன்; அர்ஜண்டைனில் எண்ணைப் பிரதேசத்தை வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு டிம் கெல்லியிடம் விடப்பட்டிருக்கிறது. டிம் கெல்லியின் முயற்சி பலிக்கவில்லை; எஜமானனின் கோபத்தைத் தவிர்ப்பதற்கு ஹேஸ்டிங்ஸ் அவனுக்கு ஒரு உபாயம் சொல்கிறன். அதாவது, லாலிட்டாவின் தகப்பனரான டான் என்ரிக் டிலாஸ் சாண்டாஸ் ஒஷியாவிடம் இருக்கும் லூஸிரோ என்ற பந்தயக் குதிரையை எஜமானனுக்கு வாங்கிக் கொடுக்க அவரிடம் அங்கீகாரம் உடனே பெறவேண்டும் என்பதே அது.

விழா அங்கு நீடித்து நடக்கிறது. குதிரைப் பந்தயக் களிப்பில் மினுக்கும் லாலிட்டாவும், அவரது தகப்பனரும் ஆல்பெர்டோவும் ஒரு சிறிய விருந்து நடத்துகின்றனர். வேறு ஒரு

நற்செய்தி ! நற்செய்தி ! !

புரசவாக்கம்

ராக்ஸி டாக்கீஸில்

வெகு சீக்கிரத்தில்

தமிழ், தெலுங்கு, ஹிந்தி படங்கள்

காட்டப்படும்.

ஆரம்ப விழாவை எதிர்பாருங்கள் !

மகாத்மாவின் உபதேசம்

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

கிரிப்ஸைப் பேட்டி கண்ட விவரம் வெளியாகியிருக்கிறது. சாரமில்லை. சமரஸத்தில் இன்னும் சிரத்தை இருப்பதாகவே சொல்லுகிறர். வாசா கைங்கரியம்! சிடுக்கை அவிழ்க்க முயற்சிக்கவில்லை. யுத்த நெருக்கடியில் பிரிட்டிஷார் விலகினல் பெரிய அபவாதமென்கிறர். இந்தியாவை மாத்திரமல்ல, இதர நேச நாடுகளையும் காட்டிக் கொடுப்பதாகும் என்கிறர். உண்மை; விலக வேண்டாம். விலகாமலிருப்பது உதவுவதற்கு அல்லவா? அதற்கு வழியென்ன? வழி தேடவே இங்கு வந்தார். காரியம் கூடவில்லை. திரும்பி விட்டார். நஷ்டம் யாருடையது? இந்தியாவுக்கு மாத்திரமல்ல: இதர நாடுகளுக்குமல்லவா? தவிர்க்க என்ன செய்து வருகிறர்: பழைய பாட்டையில் உழன்று வந்தால் வழி பிறந்துவிடுமா? சமரஸத்திற்குச் சலிப்பு பயன்படுமா? யுத்தத்தில் வெற்றி காணப் பெருமுயற்சி வேண்டும். மக்களின் மனப்பூர்வமான உதவி வேண்டும். அதைப் பெற வழியென்ன? கிரிப்ஸ் கெட்டிக்காரர்; வழி தெரியாமலில்லை; தெரியும். செல்ல மனம் துணியவில்லை. நல்ல காரியத்திற்குப் பல விக்னங்கள் ஏற்படுவது சகஜம். விலக்க உறுதி வேண்டும். உறுதியே உதவும் என்பதை அவர் அநுபவத்தில் அறிவார். தொழில் கட்சியிலிருந்து அவரை அன்று விரட்டவில்லையா? அதே கட்சி அவருடைய தாக்ஷண்யத்தை இன்று நாடவில்லையா? அந்த தைரியமும் அந்த உறுதியும் இன்று எங்கே பறந்து விட்டன? அவைகளை அவர் இழந்திருப்பாராயின், அவர் யுத்தமந்திரி சபையில் இருப்பதும் ஒன்றுதான். இல்லாததும் ஒன்று தான். யுத்தத்தில் வெற்றி பெற, இந்தியாவைக் காப்பாற்ற, இதர நேச நாடுகளுக்கு உதவ, இந்த நாட்டிலே சமரஸம் வேண்டும். சுதந்திரமே சமரஸத்திற்கு வழி.

* * * * *

இந்தியாவை விட்டு வெளியேற பிரிட்டிஷாருக்கு உபதேசம் செய்து வருகிறர் மகாத்மா. வெகு தூரம் யோசித்தே இந்த முடிவுக்கு வந்ததாகச் சொல்லுகிறர். தாம் சொன்னல் மாத்திரம் போதாது என்ற நினைவு. காங்கிரஸ் இந்த கோஷத்தை ஏற்றுக்கொண்டால் செல்வாக்கும் சக்தியும் பிறந்துவிடும் என்ற எண்ணம். அதைப் பிரதீக்ஷித்து காங்கிரஸ் தலைவருடன் ஒரு வாரமாகப் பேச்சு நடந்தது. பண்டித ஜவஹரும் பேச்சில் கலந்து கொண்டார். முடிவு என்ன ஆயிற்றென்று தெரியவில்லை. காங்கிரஸ் கார்யக் கமிட்டி வெகு சீக்கிரத்தில் கூடப் போகிறது: கூடி இதை ஆலோசிக்கும் என்றுதெரிகிறது.

உபதேசத்தின் உத்தேசம் என்ன? சாமான்யர்களுக்கு எளிதில் பிடிபடக்கூடியதாயில்லை. வெளியேறு என்றால் வெளியேறிவிடுவரா? வெளியேருவிட்டால் என்ன செய்வது? வெளியேறினல் என்ன செய்வது? ஒன்றும் புரியவில்லை. பொதுவாக பிறரை அடக்கி ஆள்வது தவறு எனலாம். ஆளப்படுவோர் ஆண்மையிழப்பர்; ஆள்வோரின் ஆண்மையும் அழிந்துவிடும். சரித்திரம் மெய்ப்பிக்கும் உண்மை. இது சரித்திரம் மெய்ப்பித்தும் யாரும் பயன்பெறவில்லை ஏற்றத்தாழ்வு இருந்து தான் வருகிறது. உலகத்தின் இயல்பு அது. சமுத்திரத்தில் காணும் அலைக்கு சமானம்.

நேரு காரணம் காட்டுகிறர்

பம்பாயில் சமீபத்தில் நடந்த பத்திரிகை நிருபர் கூட்டத்தில் பண்டித ஜவஹர் ஸர் க்ரிப்ஸ் தூது முறிந்துவிட்ட காரணத்தை விளக்கினர்.

நன்னெறி உபதேசத்திற்கும் காங்கிரஸ் லக்ஷியத்திற்கும் சம்பந்தம் என்ன? பண்டித ஜவஹர் இரண்டையும் பிணைத்துப் பேசியிருக்கிறர். காங்கிரஸ் கோருவது சுயராஜ்யம். சுயராஜ்யம் பெற அதிகாரம் மாறவேண்டும். அதிகாரத்தை மாற்றச் சொனனல் யாருக்கு மாற்றுவது என்கிறர்கள். நமக்குள்ளோ ஒற்றுமையில்லை. யாருக்கு மாற்றுவது என்ற கேள்விக்கே இடம் கொடுக்கத் தேவையில்லை. அதிகாரத்தை விட்டு விலகுங்கள் என்றல் போதும். துறந்த அதிகாரத்தை யார் ஏற்பதென்ற பிரச்னை தானகத் தீர்ந்துவிடும். பிரிட்டிஷார் நாட்டை விட்டுச் செல்ல வேண்டுமென்று மகாத்மா சொல்லவில்லை: அதிகாரத்திலிருந்தே வெளியேற வேண்டுமென்கிறர் என்று ஜவஹர் சொல்லுகிறர்.

இந்த வியாக்கியானத்தை மகாத்மா எவ்வளவு தூரம் ஏற்கிறர் என்பது இனித் தெரிய வேண்டும். இருவர் கூற்றுக்கும் இடையே முடிச்சுக்காணுத பல சரடுகள் தொங்குகின்றன. சில்லரை வேற்றுமைகளை அவை குறிக்கின்றன போலும். இப்படி ஒரு இயக்கத்தை எழுப்புவதால் என்ன பலன் எதிர்பார்க்கப்படுகிறது, பிரிட்டிஷார் விலகப்போகிறர்களா? இல்லையென்று விட்டார் கிரிப்ஸ். பலர் ஒப்பக் கூடிய காரணத்தையும் குறிப்பிட்டிருக்கிறர். ஏகாதிபத்திய நன்மையை உத்தேசித்து தங்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறர். இந்த நிலைமையில் நிர்ப்பந்த முறைகளை அனுஷ்டிக்கும் உத்தேசமா? நாட்டில் ஆதரவு கிடைக்குமா? பரீக்ஷை பார்க்க இது சமயமல்ல. ஆர அமர யோசிக்கவேண்டும்.

சுதந்திரம் பெரிது; சுதந்திரத்தையும் விட இன்று சாவதானம் பெரிது. சாவதானத்தை நாடி சுதந்திர நாடுகள் சமரஸம் தேடி வருகின்றன. பிரிட்டனுக்கும் ருஷியாவுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை இந்த சமரஸத்தையே அறிவுறுத்துகிறது. சமரஸம் ஹிந்துவுக்கும் முஸ்லிமுக்கும் இடையே ஓங்கினல் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் தானுக ஏற்பட்டுவிடும்: கருத்தும் கவலையும் அதில் செல்ல வேண்டும்.

* * * *

"லண்டன் டைம்ஸ்" பொறுப்பு வாய்ந்த பத்திரிகை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிடத்தில் சலுகையுண்டு மந்திரி சபை மனம் நோகாமல் எழுதத் தேர்ந்தது. இந்தியருக்கு உபதேசம் செய்ய அது புறப்பட்டிருக்கிறது. மகாத்மாவின் மாய வலையில் காங்கிரஸ் மீண்டும் சிக்கிவிடுமோ என்று கவலைப்படுகிறது அவருடைய அந்தரங்க சுத்தியை அது மறுக்கவில்லை. அவர் காட்டும் வழி காலத்திற்கேற்றதல்ல என்கிறது. சாத்வீக சட்டமறுப்பு சமாதான காலத்தில் காருண்யமுள்ள கவர்ன்மெண்டிடம் ஓரளவு பலிக்கலாம்; பலாத்காரமற்ற எதிர்ப்பு ஜப்பானுடன் ஒப்பேருது என்று எழுதியிருக்கிறது. கிரிப்ஸ் திட்டத்தைத் தாங்கியும் எழுதியிருக்கிறது. அந்தத் திட்டம் பிரிட்டிஷாரின் அந்தரங்கசுத்திக்கு அத்தாட்சி என்று சாதிக்கிறது. உடனே அன்றட நிர்வாகத்தில் வபையான அதிகா

ரத்தை அது கொடுக்கிறதாம்; எதிர்காலத்தில் இந்தியா வகுக்கும் அரசியல் திட்டத்தை ஏற்கிறதாம். இதைவிட என்னதான் செய்யமுடியும் என்று கேட்கிறது.

இந்தியர் குழந்தைகளல்ல; கால தேச வர்த்தமானத்தை அறியச் சக்தி வாய்ந்தவர்கள்; நியாயத்திற்கு கட்டுப்பட்டவர்கள். கிரிப்ஸ் திட்டம் ஏன் அரங்கேறவில்லை? திட்டத்தில் பசப்பு இருந்ததால்தான் பல்லைப் பிடித்துப் பார்த்தனர். வெகுதூரம் விட்டுக் கொடுத்து முடிவு கட்ட முயன்றனர். முடிவு காணும் தருவாயில பேச்சு முறிந்தது. இன்றளவும் காரணம் மர்மமாகவே இருக்கிறது. முறிவுக்குச் சாக்கும் போக்கும் சொல்லப்பட்டு வருகின்றன. ஆராய்வது விரஸத்தையே வளர்க்கிறது. ஒன்று மாத்திரம் நிச்சயமாகக் கூறலாம். சமரஸமாக சிக்கலைத் தீர்ப்பதில் இந்தியர்களுக்குள்ள சிரத்தையைவிட அந்நியர்களுக்கு இருப்பதற்கில்லை. இந்தியா இந்தியரின் தேசம்; அதன் சுக துக்கங்கள் அவர்களையே பாதிக்கும். சமரஸத்தில் சிரத்தையிருந்தும் துலங்கவில்லையானால், இந்தியர் ஜவாப்தாரியல்ல. வாதத்தைக் குழப்ப மகாத்மாவின் பெயரை இழுக்கத் தேவையில்லை. அவர் புத்தி பிரவிருத்தி வேறு வழியில் சென்றது. சமரஸப் பேச்சில் கலக்கவில்லை; விலகி நின்றார்; பேச்சில் ஈடுபட்டவர்கள் யுத்த முயற்சியை வலுப்படுத்தவே வசதி தேடினர். யுத்த லக்ஷியத்தில் பூர்ண நம்பிக்கை காட்டினர்; காரியம் கூடவில்லை. ஏன்?

கிரிப்ஸ் திட்டத்தின் குணத்தை ஸ்தூலமாக 'டைம்ஸ்' குறிப்பிடுகிறது. உண்மையில் அவ்வாறிருந்தால, சமரஸம் ஏற்பட்டிருக்கும். குணமிருப்பதாக இந்தியர் நினைக்கவில்லை. சமரஸம் ஏற்படவில்லை: சாதனை ஏறவில்லை. உண்மையில் சமரஸத்திலாவது நாட்டமிருந்தால் பேச்சு முறியவிடுவது விவேகமா? குற்றம் குறைகள் குறிப்பிடப்பட்டால் மனமொப்பியபோது களைந்தெறியக் காலமாகுமா? சொல்லவேண்டியது சொல்லியாகி விட்டது; இனி உங்கள் பாடு என்றால் அர்த்தம் என்ன? ஒப்புக்கு உலகத்திற்குச் சொல்லி பொருப்பைக் கழிக்கும் நோக்கமா? இல்லையேல் இன்னும் காலப் பிற்பாடாகிவிடவில்லை. சமரஸத்திற்கு இன்றைக்கும் இந்தியர் தயார். 'டைம்ஸ்' பத்திரிகைக்குச் சிரத்தையிருந்தால், இந்தியருக்கு உபதேசம் செய்யத் தேவையில்லை. உள்ளூரில் சற்றுக் கவனத்தைத் திருப்பட்டும். மகாத்மா பெயரை இழுத்து பூச்சாண்டி காட்ட வேண்டாம். சமரஸம் ஏற்படுவதில் அவருக்கு பூரணசிரத்தை உண்டு. நம்ப இடமில்லையே என்றே வருந்துகிறார்.

* * * *

சித்திரமும் சிருங்காரமும்

"உனக்கும் எனக்கும்"

சித்ரா புரொடக்ஷன் ஸார் "கிஸி ஸே நா கானே" (உனக்கும் எனக்கும்) என்ற ஹிந்திப்படத்தைத் தயாரித்திருக்கின்றனர். இதில் புதுமாதிரியான சம்பவங்கள் பல நிறைந்திருக்கின்றன. கேட்போருக்கு இன்பமளிக்கும் பாட்டுகளும் இதில் வருகின்றன: படப்பிடிப்பும் நேர்த்தியாக விளங்குகிறது. புரொட்யூஸர் ஸி. ஆர். க்வலானிக்குத்தான் இதற்கான பாராட்டு பூராவும் உரித்தாகும்.

பெற்றோர் விருப்பப்பிரகாரம் ஒரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் விவாகம் ஏற்பாடாகிறது. அவர்கள் இருவரும் சந்திக்கும் முதல் இரவிலேயே அந்த இளைஞன் அவளிடம் தான் வேறு ஒருத்தியிடம் காதல் கொண்டிருப்பதாக கூறி விடுகிறான். கடைசியில் இருவரும் ஒரு முடிவுக்கு வருகின்றனர். இருவரும் பிரம்மசர்யத்தை மேற்கொண்டு சிநேகத்துடன் ஜீவியதசையைக் கடக்க வேண்டும் எனபதே அது. இதில் யுவதி தனது கடமையைச் செலுத்தி வருவதுடன், இந்திய ஸ்திரீகளின் இயற்கை குண விசேஷம் சோபையுறச் செய்வது அதி ஆச்சர்யமான காட்சியாகும்.

"விஜயா"

நேஷனல் ஸ்டுடியோவின் "விஜயா" என்ற ஹிந்திப்படம்,காட்டப்பட்டு வருமிடமெல்லாம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த சிருங்காரப் படத்தில் துர்க்கா கோடே சகோதரி, மனைவி என்ற இரு வேஷங்களிலும் நடித்திருப்பது சாமான்ய நடிகைகளுக்கு சாத்தியமல்ல. ஹரிஷும் ஹஸ்னுபனுவும் வரும் காட்சிகள் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்கள் பாடுகின்றனர்: அவர்கள் ஆடுகின்றனர்: அவர்கள் குதிக்கின்றனர்: காமப் பித்து தலைக்கேறியவர் போலெல்லாம் அவர்கள் நடிக்கின்றனர். ஆனால் விஜயனாக நடிக்கும் ஹரீஷ் இந்த ஆடல் பாடல்களுடன் வாழ்க்கையை முடித்துக்கொள்ளவில்லை: காலக்ரமத்தில் பிரபல கண் வைத்தியரென்ற பெயர் வாங்கி, பரோபகாரத்தை தனது ஜீவியத்தின் லக்ஷியமாகக்கொள்கிறான்: ஏழையிடம் பணம் வசூலிக்காமல் அவர்களுக்கு சிகிச்சை பண்ணுகிறான், குலாரியாக நடிக்கும ஹஸ்னுபனுவுக்கு தனது புருஷன் தான் சர்வமும்: எந்த கஷ்டம் நேர்ந்தாலும் அவனை விட்டுப் பிரிய அவளுக்கு மனம் கிடையாது.

டைரக்டரின் சிரத்தை

நேஷனல் ஸ்டுடியோவுக்காக "ரோடி" என்ற படத்தைத்தயாரித்துவரும் டைரக்டர் மேபூப் எந்தப் படமும் இயன்றயளவுக்கு உண்மைக்கொத்தாற்போல் இருக்கவேண்டும் என்ற கருத்தைக்கொண்டவர். இந்தப் படத்தில் பிச்சைக்காரர்கள் பிச்சையெடுக்கும் சந்தர்ப்பம் ஒன்று வந்தது: உடனே டைரக்டர் இந்த பாகங்களை மேற்கொள்ள நடிகர்களை அழைக்கவில்லை. ஸ்டுடியோவுக்கு வெளியே வந்து, தெருவில் பிச்சையெடுத்துக்கொண்டிருந்த இருபது பேர்களைக்கூப்பிட்டார்: அவர்களுக்கு படத்தில் பாகத்தைத் தந்து அவர்கள் எப்படி நடக்க வேண்டும், எதைச் சொல்ல வேண்டும் என்பதையெல்லாம் அவர்களுக்குக் கறபித்தார். "பகவான் உங்களுக்கு அருள்புரிவாராக" என்ற வார்த்தைகளை ஷேக்முக்தார்,ஸிதாரா, அஷ்ராப்கான் ஆகியவர்கள் முன்னிலையில் கூறும்படி அவர் அந்தப்பிச்சைக்காரர்களிடம் தெரிவித்தார். படப்பிடிப்பும் திருப்திகரமாகவே நடைபெற்றது. டைரக்டரின் சிரத்தை காரணமாக, அன்றைய தினம், பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பவர்கள். ஒரு குறிப்பிட்ட வேலையைச்செய்து சம்பாதித்தனர்.

சென்றவார நிகழ்ச்சிகள்

★

ஸர் க்ரிப்ஸ் பேட்டி

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேற வேண்டுமென்று காந்திஜி அடிக்கடி கூறிவருவது பற்றிக் குறிப்பிட்டு லார்டு பிரிவி ஸீல் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஒரு விசேஷப் பேட்டியில் கூறியதாவது:—

"யுத்தத்தின், மத்தியில் நாங்கள் இந்தியாவைவிட்டு வெளியேறப்போவதில்லை. ஆனால் ஏகாதிபத்திய காரணங்களுக்காகவோ நோக்கங்களுக்காகவோ நாங்கள் அங்கிருக்க விரும்பவும் இல்லை.

அச்சுநாடுகளைத் தோற்கடிப்பதற்கு நமது முயற்சிகளுக்கும் நம்நேச நாடுகளின் முயற்சிகளுக்கும் ராணுவ நிலையை உத்தேசித்து இந்தியா மிகவும் முக்யமானது. இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொள்வது (வெளியேறுவது) சீனு, ரஷ்யா, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆகியவற்றின் எதிர்காலத்திற்குப் பாதகம் விளைவிக்கும். அப்படியிருக்க, இந்தியாவைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை.".

லீக் முஸ்லிம் முற்போக்கு

வங்கப் பிரதம மந்திரி கனம் பஸ்லுல் ஹக், அகில இந்திய முஸ்லிம் லீகுக்குப் போட்டியாக ஒரு முஸ்லிம் ஸ்தாபனத்தை "முன்னேற்ற அகில இந்திய முஸ்லிம் லீக்" என்ற பெயருடன் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார். இது சம்பந்தமாக இந்தியாவிலுள்ள பிரபல முஸ்லிம் தலைவர்கள் பலருக்கும் ஒரு அழைப்புப் பத்திரம் அனுப்பியிருக்கிறார். அவர் இம் முயற்சியில் தமக்கு ஆதரவு அளிக்கும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார். தமது ஆலோசனைகளை அமுலுக்குக் கொண்டு வர கல்கத்தாவில் டாக்கா நவாப் தலைமையில் ஒரு நிர்மாணக் கமிட்டியை ஏற்படுத்தியிருப்பதாகவும், அவர் அறிவித்திருக்கிறார். அக்கமிட்டிக்கு ஜனுப் சையத் பத்ருஜா காரியதரிசி.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

சர்ச்சில்-ரூஸ்வெல்ட் சந்திப்பு

மிஸ்டர் சர்ச்சில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்குப் போய்ச் சேர்ந்து விட்டதாக சென்ற 19-ந் தேதி உத்தியோக முறையில் தெரிவிக்கப்பட்டது. அவருடன் ஏகாதிபத்தியப்படை பிரதம நிர்வாகியான ஸர் ஆலன் புரூக்கும் பிரதம நிர்வாகிகள் கமிட்டிக் காரியதரிசி மேஜர் ஜெனரல் இஸ்மேயும் சென்றிருக்கிறார்கள்

ரூஸ்வெல்டின் காரியதரிசியான மிஸ்டர் எர்லியைக் கண்டு பேசியபோது அவர் கூறியதாவது:—

"2-வது போர் முனைபற்றி ரூஸ்வெல்ட்-சர்ச்சில் சந்திப்பில் பேச்சு நடபபதற்கு ஏற்பாடாகியிருக்கிறதா என்று கேட்கிறீர்கள். இருவரும் போர் நடைமுறையையும் யுத்தத்தை ஜயிப்பது பற்றியும் கலந்து பேசுவார்கள். அவர் இந்த வேலைக்காகவே வருகிறார் என்று நினைப்பது முற்றிலும் நியாயமாக இருக்கும்."

அட்டைப் படம்

20-ம் செஞ்சுரி பாக்ஸ் படமான "ஒப்புக் கோள் அல்லது மறுத்து விடு" என்ற படத்தில் நடிக்கும் டான் அமீச்சியும் ஜோன் பேன்னட்டும்.

சீவக சிந்தாமணி 1.

மூன்று கனவுகள்

★

வ. வேணுகோபாலன் எழுதியது

ஏமாங்கத நாட்டின் தலைநகராகிய இராசமாபுரத்தே சச்சந்த ராஜன் தனக்குரிய சிங்காசனத்தில் வெற்றிப் புகழோடு வீற்றிருந்தான். மங்கையர் இருபுறமும் கவரி வீச, மாகதர் துதிபாட, ஏத்தாளிகள் புகழேத்த பெருமிதத்தோடு அமர்ந்திருந்த அரசன் முகத்தை ஆவலுடன் நோக்கியிருந்தனர் சபையோர். கட்டியங்காரன், நிமித்திகன், உருத்திரதத்தன் தரும தத்தன் முதலிய மந்திரியரும், அசலன் முதலிய சேனுபதியரும் சச்சந்தன் பார்வைக்கு இலக்காக வீரந் ததும்பும் நோக்கோடு அமர்ந்திருந்தனர். புலவரும் பல சிற்றரசரும் ஒருபுறம் அமர்ந்திருந்தனர்.

அளவற்ற அதிகாரிகள் நிறைந்த ராஜ சபை அலையடங்கிய கடல்போலஒலிய வீந்திருந்தது. தனது உள்ளத்தே பெருங்காரியமொன்றைப்பற்றி ஆலோசித்திருந்தான் சச்சந்தன். அவன் முகம் கவலையால் வேறுபாட்டுடன் காணப்பட்டது. அரசனுடைய மனக்கவலையை மாற்றுவதற்கு, அவன் உள்ளக் குறிப்பையறிந்து, மந்திரியரெல்லாம் எழுந்து நின்றனர். எழுந்து நின்ற மந்திரியரில் கட்டியக்காரனைத் தனியே அழைத்தான் அரசன். அரசனிடத்து நெருங்கிப் பழகுபவனும், மந்திரித் தொழிலில் அனுபவம் மிக்கவனும் முதன் மந்திரியுமான கட்டியங்காரன் அரசனுடன் சென்றான். ராஜசபைக்கப்புறமுள்ள மண்டபத்தில் இருவரும் மறைந்திருந்து பேசலாயினர்.

"நேற்றிரவு நான் முடிவு செய்த ஒரு விஷயத்தை உன்னிடம் கூற விரும்புகிறேன்; அது விஷயத்தில் நீ என் கட்டளையை ஏற்று அதன்படி நடக்க வேண்டும்" என்றான் சச்சந்தன்

"அரசே, தங்கள் கட்டளை எத்தகையதாயினும் அதன்படி நடக்கச் சிறிதும் தடையில்லை" என்றான் கட்டியங்காரன்.

"நேற்று நான் அந்தப்புறம் சென்றபோது, என்றைக்குமில்லாமல் புதிய மாறுதலை யடைந்தது என் மனம்; அதற்குக் காரணம், என்மனைவியின் பேரழகும், அவள் கூறிய காதல் மொழியுமே தான். தக்க பருவத்தையுடைய அவள் மேனியழகிலே என் மனம் நிலைத்து விட்டது. அவளுடையவிழி வலையிலே, மயங்கி விட்டேன்; இனி அவளுடன் சிறிது காலம் அந்தப்புறத்திலேயே மகிழ்ந்திருக்க முடிவு செய்துவிட்டேன்; நான் மீண்டும் ஒப்புக்கொள்ளும் வரையில் என் அரசாட்சியை உன்னிடம் ஒப்படைக்கிறேன்; ஏற்றுக் கொள். முடியும், குடையுமன்றி மற்ற உறிமையாவும் தந்தேன்; என்றான் சச்சந்தன்.

அதைக் கேட்ட கட்டியங்காரன் தன் மனத்தெழுந்த அடங்காமகிழ்ச்சியை ஆற்றலால் அடக்கி, "ராஜாதிராஜ! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள். இப்பாரத்தை என்மேல் சுமத்தல், யானையின்மேல் இட்ட தவிசை நாயின்மேல் இடுவதைப் போன்றது; ஆதலால் இது தகாது; கட்டளை மறுத்துப் பேசியதற்கு மன்னிக்கவேண்டும்" என்றான். சிறிது கோபத்தோடு, "கட்டியங்கார! மறுமொழி கூறுதல் தகுதியல்ல; என் ஆணை: ஏற்றுக்கொள்" என்று கூறித் தன் கையிலிருந்த அடையாளக் கணையாழியை கட்டியங்காரன் கையிலணிவித்தான் சச்சந்தன்.

"அரசே! தமது ஆணைக்கு அஞ்சிக் காவலைக் கைக்கொண்டேன். தாம் தேவியிடத்து இன்பம் நுகர்ந்து நீடூழி வாழ்க. யான் நீதி வழுவாது காவல் செய்து வருவேன்; ஆணை" என்று கூறிக் காவலைக் கைக்கொள்ளுதற்குச் சேனுபதியை உடனழைத்து வெளியேறினான் கட்டியங்காரன்.

தான் செய்த முடிவை, ராஜ சபையில் அரசன் மொழிந்தான். இடி விழுந்த நாகம் போல் யாவரும் மனம் கலங்கினர்.

"அரசே! இது என்ன நீதி? அரசாட்சிக்குத் தகுதியில்லாதவனும், அபாயத்திற் கிடமான வனும் ஆகிய கட்டியங்காரனிடம் ராஜ்யத்தை ஒப்புவிப்பது தகுதியல்ல; இதனால் பலதீங்குகள் விளையும்; பூமியும் செல்வமும் தம்மை விட்டு நீங்கும்; தீர ஆராய்ந்து முடிவு செய்யவேண்டிய காரியம் இது"; என்றான் நிமித்திகன் என்ற மந்திரி.

"நிமித்திகா! அவசரப்பட்டுப் பேசாதே! எனக்கு உயிர் போன்ற நண்பன் கட்டியங்காரனே. பல போர்களில் பெரிய வெற்றிகளை எனக்குக் கொடுத்துள்ளான். அவனுக்கு அது தகுதியென்றே நான் செய்தேன்; அவன் எனக்குத் தீங்கு செய்யான்" என்றான் சச்சந்தன்.

"அரசே! நான் உண்மையைக் கூறினேன். அமைச்சர் சொல்வழி நடந்தால் நன்மையேயன்றி தீங்கு விளையாது; மங்கையரிடத்துக்கொண்ட காதலால், தீமையடைந்தோர் பலர். உலகம் பழிக்கும். பிரமன் திலோத்தமையை விரும்பி, தன் நிலை கெட்டுப் பழிப்பிற் கிடமானான்; உமையொருபங்கன் தன் பாகத்தே பார்வதியைப் பெற்று பழிப்பிற் கிடமாயினான். கண்ணன் கோபியரால் பழிப்பிற் கிடமானான். புத்தன் ஆண் கழுதையின் காமத்தைத் தணிக்கப் பெண் கழுதையாய்ச் சென்று பழிக்கப்பட்டான். பாண்டவரைவரும் ஒருத்தியை மணந்து பழிக்கப்பட்டனர்; ஆதலால் மங்கையர் மோகத்தால் மதியை இழக்கலாகாது" என்று நிமித்திகன் இடித்துக் கூறினான்.

அதற்கு மனம் சிறிதும் இணங்காத மன்னனை, உருத்திரதத்தன் என்ற மந்திரி நோக்கி, "மன்னவா! யான் ஒன்றும் சொல்லேன்; அறிவுமிக்க நிமித்திகன் மொழியை நீ கேளாமையால், நிலமும் செல்வமும் உன்னை விட்டு அகலும்; உன் மனைவிக்குத் தீங்கு செய்தவனும் ஆவாய்" என்று கூறினான்.

வேந்தன் இரண்டு மந்திரிகளுடைய மொழியையும் ஆராய்ந்தான். விசயையின் அழகிலே மனத்தைப் பறி கொடுத்த அரசனுக்கு நன்மை புலப்படவில்லை.

"மந்திரிகளே; செல்வமும், இன்பமும், வாழ்நாளும் நான் பிறந்தபோதே விதிக்கப்பட்டுள்ளன; நீங்கள் சொல்ல வேண்டாம்" என்றான் சச்சந்தன்.

"அரசே. இடித்துக் கூறுதல் அமைச்சர்க்குரியதாகலின் கூறினேன்; பிழை பொறுக்க; நீ நீண்ட நாள் மனைவியின் இன்பத்தைப் பெறுக. யான் நின் தவறு காணுமல் துறவு பூண்டு வெளிச் செல்கிறேன்" என்று கூறி, நிமித்திகன் உருத்திரதத்தனுடன் வெளியில் சென்றான். அரசன் சபையைக் கலைத்து அந்தப்புறம் சென்றான். சபையோர் மனக் கலக்கமுடன் வெளிச் சென்றனர்.

* * * *

இயற்கை யழகாலும் சமுதாயசோபையாலும் இணையில்லாது விளங்கிய விசயையோடு காமத்தின்பத்தே மூழ்கியிருந்தான் சச்சந்தன். பகலென்றும் இரவென்றும் கவனியாமல் அந்தப் புரத்தே அமைதியோடு வாழ்ந்தான்; பல நாட்களாயின, பல மாதங்களாயின; வருஷங்களுமாயின; ஆயினும் சச்சந்தனும் விசயையும் காமக் கடலைக் கரை கண்டாரில்லை. காமமென்னும் காலத்தீ அவர்களது அறிவை அழித்து விட்டது.

* * * *

ஒரு நாள் இரவின் பிற்பகல்; பொழுது விடியுந்தருணம். மன்னனின் மா பெரும் தேவியான விசையை மயங்கி உறங்கும்போது மூன்று கனவுகள் கண்டாள். அறிவு மயங்கியிருந்த அம்மங்கை, கனவுகளைக் கண்டதும் உள்ளம் பதற எழுந்தாள். அரசனை எழுப்பாமல் தனியே எழுந்து நடந்தாள். இருளிலே, சிலம்பும், மேகலையும் சப்திக்க, உடல் நடுங்க ஓடி, கண் கழுவி, மலர் கொண்டு அருகதேவனை வணங்கி, கனவு தீங்கு தராதிருக்குமாறு வேண்டினாள். பிற்பகலில் கண்ட கனவாதலின் விசயையின் மனத்தில் கவலை குடி கொண்டது.

அருகனை வணங்கிய பின்பும் விசயையின் மனம் தெளியவில்லை 'மூன்று கனவுகளின் பயன் என்ன? அதனால் விளைவது, நன்மையா? தீமையா? அரசனுக்கு அறிவிக்கலாமா? கொடிய கனவாயிருக்குமானால் முன்னமே தெரிந்துகொள்வது தான் நன்மையாகும்' என்று எண்ணமிட்டாள். கனவின் பயனறிவதில் ஆவல் ஒருபுறம்; அச்சம் ஒருபுறம், இவ்விதம் மனக் கலக்கத்தோடு அரசன் துயில் நீங்கி எழுந் தருணம் அவனருகே சென்று அமர்ந்தாள்.

அரசன், விசையையின் முகத்தைப் பார்த்ததும்,ஏதோ அவள் கவலைப்படுவதாக அறிந்தான்.

"என் அன்பே! ஏன் மனக் கலக்கம்? உள்ளத்திலிருப்பதை வெளிப்படையாய்க் கூறிவிடு; உன் மனம் கவலைப்படுவது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது" என்றான்.

"ஆர்ய குலோத்தம! ஓர் அசோகமரம், தன் பூங்கொத்துக்கள் தளிரோடு கருகி விழ, தானும் முறிந்து கீழே சாய்ந்தது; அதனடியில் ஒரு முளை தோன்றியது. அம்முளை எட்டுப் பூமாலைகளையுடைய ஒருமுடிக்கு ஆதாரமாய் நட்டுவைத்தாற் போல, விரைவில் வளர்ந்தோங்கியது; இவை யான் கண்ட மூன்று கனவுகள்" என்று நாத் தழு தழுக்கக் கூறினாள்.

பலகலையும் வல்ல சச்சந்தன் கனவின் பயனை அறிந்தான்; உடனே புன்முறுவலோடு, கிரீடம் தாங்கிய தன் தலையை இருமுறை அசைத்து.

"கண்ணே! கனவின் பயன் நன்மையே தான்; கேள்; முடி, நின் மகன்: எட்டுப்பூமாலைகள்

(12-ம் பக்கம் பார்க்க)

ஐம்பெருங் காப்பியங்களுள் சீவக சிந்தாமணி ஒன்றாகும். ஜைனர்களால் பாராயணமாகப் போற்றப்பட்டு வரும் இந்தக் கிரந்தத்தைச் சிறப்புறப் பதிப்பித்து தமிழகத்திற்கு அரும் தொண்டாற்றியவர் காலஞ் சென்ற மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர். இவ்வுத்தம கிரந்தத்தில் அநேக ரஸமான சம்பவங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் பிரதி வாரமும் தொடர்ச்சியாக,மூல கதைக்குப் பாதகமில்லாமல், மஹாமஹோபாத்யாயரிடம் அந்திய காலத்தில் உடனிருந்து வித்யாப்யாசம் செய்த ஸ்ரீ வ. வேணுகோபாலனால் எழுதி வரப்படும்.

பண்டைகாலப் போர் முறை

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

> உலகம் முழுதும் யுத்தத்தில் தற்சமயம் தவித்துக் கொண்டிருக்கிறது: இந்த யுத்தத்தில் பல புதிய முறைகள் கையாளப்பட்டு வருகின்றன: நவீன யந்திரங்களும் நவீனக் கருவிகளும் உபயோகமாகி வருகின்றன. சில நூற்றண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் போர் முறை எவ்விதம் இருந்தது என்பதை இந்தக் கட்டுரையில் கண்டறியலாம். இது விஷயமாக மேலும் சில ரஸமான வியாசங்களும் வெளிவரும்.

'தடி எடுத்தவன் தண்டல் காரன்' என்று விளங்கிய காலத்தில் ஒவ்வொரு அரசாங்கமும் அதன் படைவலிமையாலேயே நிலைத்து நின்றது. ஒரு பரந்த ஸாம்ராஜ்யத்தைக் காக்கவோ, சிறு ராஜ்யத்தை விஸ்தரிக்கவோ எந்தக் காலத்திலும் படைவலிமையே முக்கியமான அம்சமாக விளங்கி வந்திருக்கிறது.

முற்காலத்தில் இந்தியமன்னர்கள் கொண்டிருந்த படைவலிமை பிரசித்தமானது. அவர்களுடைய படையில் ஏராளமான போர் வீரர்களும் இருந்தனர். அஞ்சா நெஞ்சம் படைத்த அவர்களுடைய வீரத்தைப் பிற நாட்டவர் பலரும் புகழ்ந்திருக்கின்றனர்.

எனினும் பண்டைக்காலத்திய மன்னர்கள் நிறுவி வந்த படை எத்தகையதாக இருந்தது. போர் வீரர்கள் எவ்வளவு பேர் இருந்தனர். அவர்களை எந்த விதமாகப் பிரித்துப் பரிபாலித்து வந்தனர், முதலிய விஷயங்கள் நன்கு விளங்கவில்லை. அர்த்த சாஸ்திரம், சுக்கிர நீதி போன்ற ராஜதர்மநூல்களில் காணப்படும் விதிகளையே மன்னர்கள் அனுசரித்து வந்தார்களா அல்லது கால தேச பாத்திரங்களை ஒட்டிச் சௌகரியப்படி செய்து வந்தார்களா என்பதையும் நாம் திட்டமாகச் சொல்லமுடியாது.

ஆயினும் மத்திய காலத்தில் மகோன்னத ஸ்திதியில் விளங்கிய விஜய நகர ஸாம்ராஜ்யத்தைப் பற்றிய குறிப்புகள் அதிகமாகக் கிடைக்கின்றன. அந்தக் காலத்தில் நம் நாட்டுக்கு வந்து சென்ற போர்த்துகீசியப் பாதிரிகள் எழுதி வைத்துள்ள குறிப்புகளிலும், கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன.

அவற்றிலிருந்து விஜயநகர மன்னர்கள் வைத்திருந்த படை அமரம், கைஜீதம் என இரு வகைப்படும் என்பது விளங்குகின்றது. அதாவது துணைப் படை, கூலிப் படை என்பனவாம்.

"கூலிப்படை"

கூலிப் படை என்பது அரசாங்கத்திலே சம்பளம் பெற்று அவர்கள் கீழ்ச் சேவகம் செய்யும் வீரர்களைக் கொண்டது. அமரம் என்பது அவ்விதம் அமைந்தது அன்று. சக்கிரவர்த்தியின் ஆணைக்கடங்கி அதிகாரம் வகிக்கும் சிற்றரசர்கள் மஹா மண்டலேஸ்வரர்கள் சாமந்தாதிபதிகள், முதலியோர் வைத்திருக்கும் படையைக் குறிக்கும். யுத்த காலங்களில் அவர்கள் சக்கரவர்த்தியின் பக்கத்தில் போர் புரிவார்களாயினும், அவர்களைக் கட்டி மேய்ப்பது, அவர்களுக்கு உரிய சம்பளம் கொடுப்பது முதலியவற்றை அந்த அந்த அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு அரசாங்கமும் யானைப் படை, குதிரைப் படை முதலியவற்றை வைத்திருந்தாலும், காலாட்படையையே மிகப் பெரியதாகக் கொண்டிருந்தது. விஜய நகர ஸாம்ராஜ்யத்தில் காலாட்படையில் ஈட்டி வீரர்கள், வில்லாளிகள், துப்பாக்கி சுடுபவர்கள், முகம்மதியர்கள் என நான்கு பிரிவுகள் இருந்தன.

ஈட்டி வீரர்கள் கேடயத்தையும் ஈட்டியையும் தாங்கிப் போர் புரிவர். அவற்ருேடு அவர்கள் வாளையும் இடுப்பில் கட்டிச் செல்வர். கேடயம் மிகுந்த வேலைப்பாடு உள்ளதாக விளங்கும். சிலவற்றிலே வெள்ளியுடன் தங்கமும் கலந்து பூவேலை செய்யப்பட்டிருக்கும். மற்றும் சிலவற்றிலே புலி சிங்கம் போன்ற பயங்கரமான மிருகங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும்; தனி வெள்ளியாலே அலங்கரிக்கப்பட்ட கேடயங்களும் உண்டு. ஆயினும் பெரும்பாலானவை சாதாரணமான வர்ணம் பூசப்பட்டு விளங்கும்: அவை நன்ருக மெருகிடப்பட்டுப் பளபள வென்று மின்னும். முகம் பார்க்கும் கண்ணாடியாகக் கூட அவற்றை உபயோகிக்கலாம் என்று சொல்வர்.

அவர்கள் தாங்கிச் செல்லும் வாளும் அதே விதமாக உயர்ந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருக்கும்: அதிகாரிகளுடைய கத்திகளின் பிடியில் வைரம் முதலிய ரத்தினங்கள் இழைத்த தங்கக் கூட்டுகளைக் காணலாம்.

வில்லாளிகள்

வில்லாளிகள் வில்லையும் அம்பையும் கொண்டு போர் புரிவர். அவற்ருேடு இடையில் சிறு உடை வாளையும், பிடியுடன் கூடிய கோடரியையும் செருகியிருப்பர். வில்லுக்குத் தங்கம் வெள்ளிக் கட்டுகளும் பட்டைகளும் கட்டியிருப்பார்; நாண்கயிறு உயர்ந்த பட்டினுல் செய்யப்பட்டிருக்கும். அம்புகளின் நுனி மிகவும் கூர்மை வாய்ந்ததாகும். அடிப்புறத்தே காணப்படும் இறகுகள் அழகானவையாகவும் இருக்கும். அதை போல உடைவாளின் பிடியும், கோடாரிக் காம்பும் பல சமயங்களில் நல்ல வேலைப்பாட்டுடன் காணப்படும்.

துப்பாக்கி வீரர்கள் பலவகையான துப்பாக்கிகளைக் கொண்டு யுத்தம் செய்வர்.

முகம்மதிய வீரர்கள் பெரும்பாலும் வெளி நாடுகளினின்றும் வந்தவர்களாகவே இருப்பர். அவர்கள் கத்தி, கேடயம், உடைவாள், துருக்கி தேசத்து வில், ஈட்டி, வெடிக்கும் கருவிகள் முதலியவற்றையும் கொண்டு போர் புரிவர். அவர்கள் அந்த வகையான ஆயுதங்களில் ஒவ்வொன்றையும் உபயோகப்பதில் சமர்த்தர்கள்.

அந்தக்காலத்தே போர்வீரர்களில் ஒவ்வொருவரும் எத்தகைய உடையைத்தான் உடுத்த வேண்டும் என்ற விதி கிடையாது: ஓர் அரசாங்கத்தைச் சேர்ந்த வீரர்கள் யாவரும் ஒரே விதமான உடையையே தரிக்க வேண்டும் என்ற நியதி கிடையாது. வீரர்கள் யாவரும் அவரவர்களுக்குப் பழக்கமான உடையே உடுத்தி வந்தனர்.

இந்த வீரர்கள் அணிவகுப்பு முதலிய விசேஷ காலங்களில் உயர்ந்த ஆடைகளை அணிந்து வந்தாலும் போர் முனைக்குச் செல்லும்போது எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக உடுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு ஸௌகரியமாகக் கருதுவர். போர்முனையில் அவர்கள் அநேகமாகக் கருநீலம் அல்லது கறும் பழுப்பு நிறத்தாலாகிய ஒரு சல்லடத்தை மட்டுமே அணிந்திருப்பர். எதிரிகள் கையில் எளிதில் சிக்கிவிடாமல் இருப்பதற்காக உடலில் எண்ணையைப் பூசியும் இருப்பதுண்டு.

உயர்ந்த கவசங்கள்

வில்லாளிகள் பல சமயங்களில் தங்கள் உடலைக் கவசத்தால் மூடியிருப்பர். அது உடல் தலை கால் கை முதலியவற்றை நன்ருக மறைத்துக் காப்பாற்றும், அது பொதுவாக பச்சைத் தோலால் செய்யப்பட்டிருக்கும், நடுவில் இரும்புத் தகடு கொண்டு இரண்டு மூன்று அடுக்குத் தோல்களால் தைக்கப்பட்ட அதைத் தாண்டிக் கொண்டு கத்திவெட்டோ, ஈட்டிக்குத்தோ பாய்ந்து வீரன் உடலைத்தொடாது. இந்தக் கவசங்களிலும் ஓரங்களில் தங்கம் வெள்ளிப்பூண் கட்டுவது உண்டு.

கேடயம் தாங்கிப் போரிடுபவர் கவசம் தரிப்பது வழக்கமில்லை. கேடயமே அவர்கள் உயரத்துக்குச் சரியாக இருந்து அவர்களைக் காக்கும், அதனுல் கவசத்துக்கு அவசியமே இல்லை.

விஜயநகரத்துக் காலாட்படையில் வெவ்வேறு பாஷைகளைப் பேசும் பல தேசத்தவர்களும் இருந்தனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, ஹிந்துஸ்தானி முதலிய பல பாஷைகளைப் பேசுபவர்களும் இருந்தனர். இவர்கள் யாவரும், வழக்கம்போலத் தங்கள் பாஷையையே பேசி தங்கள் உடையையே உடுத்தித் தங்கள் பழக்கங்களைக் கைவிடாமல் நடந்துவந்தனர். படையின் ஒற்றுமைக்கு இது விரோதமாக இருக்காதா என்று சிலர் சந்தேகிக்ககூடும். எனினும் அதனுல் பல நன்மைகள் இருந்தன. போர்க்களங்களில் சகோதரப்பான்மையின் நெருங்கிய உறவை அளித்ததோடு, அவர்கள் தங்களுக்கு எளிதாகப் பழக்கமான முறையில் போர் புரியும்போது தங்கள் சாமர்த்தியத்தை நன்கு எடுத்துக் கூட்டிச் சாகஸமான காரியங்களை முடித்துவைக்க உதவி ஏற்பட்டது.



இயற்கை குணம்

சிறு கதை

★

ஸ்ரீமதி கமலா.

காமாக்ஷி கண்ணீர் வடித்தபடி வீற்றிருந்தாள். ஆபீஸிலிருந்து அப்பொழுது வந்த அண்ணுசாமி மனைவியின் கண்ணீரைக் கண்டு மலைத்து நின்ருர்.

"ஏன்? இப்படி காஞ்சன மாலையைப் போல் கண்ணீர் வடிய உட்கார்ந்திருக்கிருய்?"

"நாளுக்கு நாள் இந்த ராஜத்தின் துடுக்குத் தனத்தை என்னுல் பொறுக்க முடியவில்லை. வயது வந்த பெண் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருப்பதில்லை. எந்த நேரமும் தெருவில் எந்த ஆடவன் போனுலும் கண்ணடித்து அழைப்பதும், அந்த கண் சிமிட்டலும், குறும்பு சிரிப்பும் உடல் வளைப்பதும் பார்த்தால் பற்றிக் கொண்டு எரிகிறது. இவளை எவ்வளவு விதமாய் நல்வழிப்படுத்த முயன்றும் முடியவில்லை. ஏதோ பாட்டு கொஞ்சம் அலுக்கியும் குலுக்கியும் பாடுகிருள். அவளைக் கண்டால் வரவர வெறுப்புத் தட்டுகிறது. தாயின் அன்பு என்பது அறவே அவள் மேல் இல்லை. கடவுள் ஏனோ என்னை சோதிக்கிருர். காலை கலாசாலைக்கு சென்றவள் இன்னும் வரவில்லை" என்று துக்கத்துடன் காமாக்ஷி சொல்லவே, அண்ணுசாமி திண்ணைச் சாமிபோல் சேரில் சாய்ந்தார்.

அச்சமயம் ரோஹிணி என்ற ஓர் பதினெட்டு வயது மங்கை அவ்விடம்வந்து 'ராஜம்! ராஜம்,' என்று கூப்பிட்டாள். அவள் குரலை கேட்டதும் காமாக்ஷி "ரோஹிணீ! இங்கு வா" என்ற அவ்வம்மையின் குரலைக் கேட்டதும் அப்பெண் உள்ளே வந்தவள் 'அண்ணுசாமி'யைக் கண்டதும் அப்படியே பின்புறம் நடந்தாள்.

"தேவலை. வா. எங்க ராஜம் எங்கே தெரியுமா?"

"நான் அப்புறம் வருகிறேன். இன்று அவள் கலாசாலைக்கு வரவில்லை: ஏனென்று கேட்டு போக வந்தேன்." என்று சொல்லிக்கொண்டே சென்ருள். அண்ணுசாமி அப்பெண்ணை திரும்பிப பார்த்தார்.

"காமூ! அக்குழந்தை பேர் என்ன ரோஹிணியா? பெண்ணும் அழகாய் சமர்த்தாயிருக்கிருள். நான் ஒன்று சொல்கிறேன். விகல்பமாய் எண்ணுதே! அக்குழந்தை பெண்ணை என் துடையில் வீற்றிருக்கச் செய்து ஆசை தீர முத்தமளிக்க வேண்டும் போல் தோன்றுகிறது. அவள் மங்கைப் பருவ மெய்திருந்தாலும் என் புத்திக்கு பச்சிளம் குழந்தை போல் தோன்றுகிருள். அவள் யார்?"

"அவள் சந்தானகிருஷ்ணரின் வளர்ப்பு பெண். வளர்ப்பு பெண்ணுயிருந்தாலும் அழகும் புத்தியும் உடையவளாயிருக்கிருள். வெகு புத்திசாலி. ராஜம் காரத்தாலை வீட்டை விட்டு சென்றவள் கலாசாலைக்கும் செல்லாமல் எங்கே சென்றிருக்கிருள்? ஐயோ! இவளால் மானம் போகிறதே" என்று துக்கித்தாள்; அண்ணுசாமியும் கண் கலங்கினுர். தங்கள் இரு புக்க வம்சத்திலும் இம்மாதிரி யாரும் இருக்கவில்லை. இதென்ன அதிசயம்? இந்தப் பெண் இப்படி துணிந்து நடப்பதற்குக் காரணம்? என்ன என்று அறியு மண்டையைப் பிளந்துக்கொண்டார். ஒன்றும் தோன்றவில்லை. ராஜத்தை நினைக்கச் சென்ருல் கண்முன் ரோஹிணி வந்து நிற்கிருள். விசாரத்துடன் அன்றைய பொழுதைக் கழித்தார்கள். மகள் வரவில்லை. விடிந்தது. இவர்கள் கவலை மிக அதிகமாய் போயிற்று. தங்களுக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் தேடினுர்கள். ஒன்றும் பலிக்கவில்லை. 'கேலண்டரில்' ஆறு காகிதங்கள் கிழித்தாயிற்று.

* * * *

அண்ணுசாமி தம்பதிகள் காலதேவனின் கருணையற்ற செய்கையில் கட்டுண்டு கண் கலங்கியவாறே காலத்தை கழித்தனர். பெண்ணின் இருப்பிடமே தெரியவில்லை.

அண்ணுசாமி ஒருபெரிய "ஆந்திரா அஷ்யூரென்ஸ்" கம்பெனியின் டைரெக்டர். நல்ல வருமானமுடையவர். தன் மகள் காணமற்போனதிலிருந்து கவலையிலாழ்ந்து கஷ்டப்பட்டார், அன்று இரவு ஆபீஸிலிருந்து அதிக போது போய் வந்தார். காமாக்ஷி தூங்கிவிட்டாள். அவர் தூக்கம் வராததால் பத்திரிகையை பார்த்துக்கொண்டிருந்தார். பத்திரிகையை பார்த்து கொண்டு வரும்போது நடுவில் ஓர் இடத்தில் ரோஹிணியின் புகைப் படம் போடப்பெற்று "ஆங்கில தர்க்கப் போட்டியில் ஆண்களையும் தோற்க வைத்து முதல் பரிசு பெற்ற மிஸ் ரோஹிணி என்று பிரசுரித்திருந்தது. அவள் புகைப் படத்தை உற்று பார்த்தார். அம்முகம் எங்கோ பார்த்ததைப்போல் தோன்றவே யோசனையிலாழ்ந்தார். யாரோ தனக்கருகில் நெருங்கிப் பழகுபவர்போல் தோன்றிற்று. எழுந்தார். தன் வீட்டிலிருக்கும் புகைப் படங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். ஒன்றும் விளங்கவில்லை. இரவு யோசனையுடன் முடிந்தது. காலையில் கவலையுடன் எழுந்தார். காமாக்ஷி எழுந்ததும் அவளிடம் தன் கவலையை வெளியிட்டார்.

"இறந்த உங்களுடைய சஹோதரி சாரதாவைப்போல் அவள் அவ்வப்பொழுது எனக்குத் தோன்றுவதுண்டு. நன்ருய்ப் பாருங்கள்" என்ருள்

அண்ணுசாமி தன் பெட்டியைத் திறந்து தன் சஹோதரி சாரதாவின் புகைப் படத்தை அருகில் வைத்துக்கொண்டு ரோஹிணியின் படத்தை ஒப்பிட்டு பார்த்தார், தன் மகள் தான் ரோஹிணி என்று அவர் மனதில் யாரோ ஆணித்தரமாய் சொன்னுர்கள்.

அவர் யோசனை சுமார் பத்தொன்பதாண்டுகளுக்கு முன் சென்றது:—பிரசவ வேதனைப் படும் காமாக்ஷி அவ்வேதனையை பொறுக்கக் கூடாமல் இழுப்பு வந்து அவஸ்தைப் படுகிருள். அவளை வீட்டில் வைத்துக்கொள்ள சாத்தியப்படாததால் அவளை வைத்திய சாலைக்கு அனுப்பினுர். சஸ்த்ரத்தினுல் குழந்தை எடுக்கப்பட்டது. குழந்தையும் தாயும் அபாயத்திற்காளாகாமல் தப்பினுர்கள். ஒரு மாதத்திற்குப் பின் குழந்தையுடன் காமாக்ஷி வீட்டிற்கு வந்தாள். அக் குழந்தை மேல் குழந்தை என்ற ஆசை ஒன்றிருந்ததே தவிர தந்தையின் பாசமோ அன்போ சுறக்கவில்லை, அது தன் இளமையின் தன்மை என்று நினைத்திருந்தார். ஆனுல் இப்பொழுது ஆறுமாதமாய் ரோஹிணியை பார்த்தது முதல் தந்தையின் பாசம் அவரையும் அறியாமல் சுறக்கத் தொடங்கியது.

* * * *

பதினேரு மணிக்கு



இப்பொழுது மணி பதினென்று. காலை வேலைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்தமினிது" என்ருர் ஒரு கவி, ஆனுல் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினுல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது .IK 157

ரோஹிணி மேல் அன்பும் ஆசையும் அதிகமாக ஆக ராஜத்தை நினைத்தாலும் வெறுப்பேற்பட்டது. அவர் மனதில் அவரையும் அறியாது வேதனை செய்யத் தொடங்கிற்று. ஒரு நாள் ஆபீஸில் வேலை செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று ஓர் யோசனை தோன்றிற்று. தன் மனைவி பிரசவித்த வைத்தியசாலைக்கு டெலிபோன் செய்து தான் அங்கு வந்து பத்தொன்பதாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ரிஜிஸ்டரைப் பார்க்க வேண்டுமென்றும் தன் 'இன்ஷ்யூரென்ஸ்' கம்பெனிக்காரர்களுக்கு பாத்தியப்படும் விஷயங்கள் அதில் சிக்கக் கூடுமென்றும் சொன்னார்.

அன்று சர்க்கார் வைத்திய சாலையில் பழைய ரிகார்டுகள் இருக்கும் அறையிலிருந்த தூசி எல்லாம் தங்கள் அடைக்கலத்தை விட்டு வெளியேறிற்று. அங்குமிங்கும் தலை கீழாய் விழுந்து கிடந்த ரிஜிஸ்டர் புஸ்தகங்களெல்லாம் ஒழுங்கு பெற தலை தூக்கி நின்றன.

மாலை மூன்று மணிக்குமேல் அண்ணுசாமி வைத்தியசாலைக்கு வந்து பத்தொன்பதாண்டுகளுக்குமுன் தன் மனைவி பிரசவித்த தேதியைக் குறிப்பாய் சொல்லி அந்த ரிஜிஸ்டரை எடுத்துப் பார்க்க சொன்னார். இவர் மனைவி பிரசவித்த அன்று வைத்தியசாலையில் ஐந்து பெண்குழந்தைகள் பிறந்தன. அதில் இரண்டு முஸ்லீம் ஸ்திரீகள். ஒன்று தேவதாசி: மற்ற இரண்டு பிராம்மண 'ஜாதியைச் சேர்ந்தவை. அதில் ஒன்று மறு நாளே இறந்துவிட்டது. மொத்தம் நான்கு குழந்தைகள் சுகமாய் தாயுடன் வீட்டிற்கு அனுப்பப்பட்டன.

"அக்குழந்தைகளுக்கு ஏதாவது குறி உண்டா?" என்று அண்ணுசாமி கேட்டார்.

"பிராம்மண ஸ்திரீ காமாக்ஷி என்பவள் பெற்ற பெண் குழந்தைக்கு முதுகில் கரிய மச்சம் ஒன்றுண்டு. அதன் கால்விரல்களில் ஒன்று சற்று ஒரு பக்கமாய் சாய்ந்து இருக்கும்." இப்படி பலவாறாய் குழந்தைகளின் குறிகளை சொல்லவே, தன் பெண்ணிற்கு தானறிந்தமட்டில் எந்த மச்சமும் அங்கவைகல்யமுமில்லாததால் "தன் குழந்தை மாற்றப்பட்டுவிட்டது." இப்பொழுது யாரிடம் சண்டை போடுவது? தன் குழந்தையை தவிர்த்துமீதி மூன்று குழந்தைகளுக்கும் ஏதாவது அடையாளம் உண்டா? தேவதாசியின் பெண்ணைத் தவிர மீதி இருந்த குழந்தைகளுக்கு ஏதோ ஒவ்வொரு அடையாளம் கிடைத்தது. 'அப்படியானல் தன்னல் தன் குழந்தை என்று மிகவும் அருமை பெருமையாய் வளர்த்த பெண் தேவடியாள் பெண்ணு? அய்யோ! விதியே! அதனுல் தான் ராஜத்தின் குணம் அப்படி இருந்ததோ? இயற்கை குணம் எங்கு போகும்? அப்படியானல் நம் பெண் தேவதாசியின் வீட்டில் தன் தொழிலை நடத்திக்கொண்டிருப்பாளா?" என்று நினைக்கும் போதே நூறு சம்மட்டிகளால் ஒரேமுறையாய் ஹிருதயத்தை பிளப்பதைபோன்ற வேதனை உண்டாகிவிட்டது.

தன் மனக்கவலையை ஒருவாறு அடக்கிக்கொண்டு தேவதாசியின் விலாசமறிந்து வீட்டுக்கு சென்றார். அச்சமயம் காமாக்ஷி கண்ணீர்சோர ரோஹிணியிடம் பேசிக்கொண்டிருந்தாள். ரோஹிணியைக்கண்டதும் அண்ணுசாமி "குழந்தாய்! நீ தர்க்கப்போட்டியில் ஜயித்ததை பத்திரிகையில் கண்டதும் என் குழந்தையாயிருந்தால் எவ்வளவு பெருமைப்படுவேனே அவ்வளவு பெருமையும் ஆனந்தமும் சேர்ந்து என்னை மயக்குகிறது..." என்றார். அவளை பார்க்கப் பார்க்க தன் ஸஹோதரியின் நினைவும் தன் பெண் என்ற உறுதியும் ஏனே அழுத்தந்திருத்தமாய் தோன்றியது.

* * * *

மறுநாள் காலை தேவதாசியின் விலாசத்திற்கு சென்றார். அவர் தேடிச் சென்ற தாசிகள் தெருவில் அவர் தேடிச் சென்ற தாசி காலமாகி விட்டதாக தெரியவே அவள் பெண்ணின் அடயாளங்களை விசாரித்து அப்பெண் எங்கிருக்கிருளென்று கெட்டார். அப்பெண் தாசித்தொழிலை விரும்பாமல் யாருக்கும் சொல்லாமல் எங்கோ சென்று விட்டதென்று தெரிய வந்தது. அண்ணுசாமி மறுபடியும் கவலையிலாழ்ந்து அவள் வீட்டை விட்டகன்ற நாளைக் குறித்துக்கொண்டு தன்னில்லமடைந்தார். இரண்டொரு நாள் கவலையுடன் காலம் கழித்தபின் எல்லா பத்திரிகைகளிலும் தாசிப்பெண்ணின் அடையாளங்களை விவரித்து பிரசுரித்து அப்பெண்ணின் இருப்பிடத்தைத் தெரிவிப்போருக்கு தக்க சன்மான மளிப்பதாகப் பிரசுரித்தார்.

இரண்டு நாட்களுக்குப்பின் சந்தானகிருஷ்ணர் பரபரப்புடன் அண்ணுசாமி வீட்டிற்கு வந்து அவர் அந்த பெண்ணைப் பற்றி ஏன் அப்படி சிர்த்தை எடுத்துக்கொண்டார் என்று வினவும்போது அவரிடம் ஓர் கடிதம் வந்தது. அதிலிருந்து அனுதாச்ரமத்தின் தலைவி அவரை பார்க்க வந்து காத்திருப்பதாக தெரியவே, அவ்வம்மையை தன்னிருப்பிடம் அவர் வரவழைத்தார். அந்தம்மாள் சந்தானகிருஷ்ணரை பார்த்ததும் திகைத்து "நல்லவேளை நீங்கள் இச்சமயம் இங்கிருப்பது மிகவும் நல்லதாயிற்று" என்று சொல்லி அமர்ந்தாள்.

அண்ணுசாமி தன் உள்ளக் கொந்தளிப்பை அடக்கிக் கொண்டு வீற்றிருந்தார், அனுதாச்ரமத்தின் தலைவி, அண்ணுசாமி பிரசுரித்திருந்த அங்க அமைப்புள்ள பெண் தங்கள் சரணலயத்திலிருந்ததாகவும், பிறகு ஆச்ரமக் காப்பாளர்களில் ஒருவராகிய சந்தானகிருஷ்ணர் அப்பெண்ணை வளர்ப்பதாகவும் சொன்னுள்.

"இவ்வளவு கடுப்பிடி ஏன் செய்கிறீர்கள்? எங்கள் ரோஹிணியைப்பற்றி" என்று சாந்தானகிருஷ்ணர் கேட்டார், உங்கள் ரோஹிணி என் பெண்" என்ளூர்கள். சந்தானகிருஷ்ணர் பெரிய அதிர்ச்சிக்கு ஆளானவர் போல் திகைத்தார், அண்ணுசாமி வெகு நிதானமாய் தாம் ஒரு வாரமாய் படும் சிரமத்தையும், தம் சந்தேஹத்தையும், அதை ஊர்ஜிதம் செய்துக்கொள்ள தாம் முயன்ற முயற்சியையும் சொன்னர். எந்த காரணத்தைப்பற்றியும் "ரோஹினியை" சந்தான கிருஷ்ணர் விட சம்மதிக்கவில்லை. ஈன்றவர்களுக்கு ஈன்றபாசம் வளர்த்தவர்களுக்கு வளர்த்த பாசம்.

இவர்கள் இப்படி தர்ம சங்கடத்திலாழ்ந்திருக்கையில் அண்ணுசாமியின் மருமகன் ஆனந்தன் ஐ. ஸி. எஸ். அப்பொழுது தான் வந்திறங்கினன். பெண்ணைத் தேடும் வேலையிலீடுபட்டிருந்த அண்ணுசாமி மருமகன் வருவதையும் மறந்து போனர்.

ஒரு வாரத்திற்கு பின் சந்தான கிருஷ்ணர் ஏதோ கேஸ் விஷயமாக வெளியூர் சென்றிருந்தார். அது தெரியாமல் அண்ணுசாமி, அவரிடம் தம் பெண்ணை தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்க ஆனந்தனுடன் சென்றார். அச்சமயம் ரோஹிணி "எந்தரோம ஹானு பாவுலந்தரிகி வந்தனம்மு" என்ற அய்யர்வாளின் கீர்த்தனையை வெகு இன்பமாய் பாடிக்கொண்டிருந்தாள். காலடி ஓசையை கேட்டு திரும்பிப் பார்த்தாள். இனி சந்தான கிருஷ்ணரின் பெண்ணுனல் என்ன? அண்ணுசாமியின் ஆசைப்புதல்வியானல் என்ன? ஆனந்தனின் அர்த்தாங்கி ரோஹிணி!

குட்டிக் கதை

பணம் தராதது

"ரேவதி" எழுதியது

கமலா வாசலை மொழுகிக் கோலமிட்டுக்கொண்டிருந்தாள். இரண்டு வரிகள் இழுத்து விட்டு, கோலப் பொடி எடுக்க நிமிர்ந்தாள். தெருவில் ஒரு பெரியமோட்டார் வண்டி மெல்லச்சென்று கொண்டிருந்தது, வண்டியினுள், நாகரிக உடை அணிந்த, ஒரு மாது சுகமாய்ச் சாய்ந்து கொண்டிருந்தாள்.

கமலாவின் உள்ளத்தில் பல எண்ணங்கள் உடனே தோன்றின. 'எனக்கும் இப்படி ஒய்யாரமாய்ச் சவாரி செய்ய ஒரு மோட்டார் இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! குழந்தைகளுக்குப் பட்டுச் சட்டை! அவருக்கு ஒரு ரேடியோ! எனக்கு வைர நகைகள்!' கமலா தன் கண்ணுடி வளையல்களையும் பழம் புடவையையும் அசட்டையாய்ப் பார்த்துவிட்டு சட்டென்று உள்ளேசென்று அடுப்பை மூட்டினுள்.

"அம்மா! அம்மா!" என்று வாசலில் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அப்பொழுது தான் காரியங்களை எல்லாம் முடித்து விட்டுச் சற்றே படுத்திருந்த கமலா, 'சூள்' கொட்டிக் கொண்டே கதவைத் திறந்தாள். கலெக்டர் ஆபீஸ் சேவகன் வாசலில், நின்று கொண்டிருந்தான். அன்று அவ்வூருக்குப் புதிய கலக்டர் வந்திருந்தார். கலெக்டர் மனைவிக்கு வீட்டை எடுத்து வைக்க, ஒத்தாசைக்கு கமலாவுக்குச் சொல்லி அனுப்பி இருந்தாள்.

கமலா கலெக்டர் வீட்டுக்குச் சென்றதும். ஒரு டவாலி அவளை உள்ளே அழைத்துப் போய் கூடத்தில் உட்காரச் சொன்னுன். எதிர் அறையில் மேஜையின் மீது பலகாரங்கள் தயாராக இருந்தன, வீடு முழுவதும் விலை பெற்ற சாமான்கள் இறைந்து கிடந்தன. இவை எல்லாம் பணம் இல்லாதவர்களுக்கு ஏது? கமலாவுக்குப் பணம் மட்டும் இருந்தால் அவள் சந்தோஷத்திற்கு எல்லை ஏது? பக்ஷமான கணவன், கண்மணிகள் போன்ற இரண்டு குழந்தைகள் எல்லாம் இருந்தும் பணம் என்பது இல்லையே?— என்று கமலா பெருமூச்சு விட்டாள். 'நம்மை விட இவர்கள் எவ்வளவு சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவார்கள்?' என்று கமலா எண்ணியபோதே பக்கத்து அறையில் இருந்து வந்த சப்தம் கேட்டு திடுக்கிட்டாள்!

கலெக்டர் மனைவி, கோபமாய்ப் பேசிக்கொண்டிருந்தாள் 'ஒரு நாளாவது என்னுடன் வீட்டில் இருந்து அன்பாய் நடந்து கொளுகிறீர்களா? இன்னிக்குக் கிளப்புக்குப் போகா விட்டால் என்ன? குழந்தைகளுடன் வீட்டில் சத்தே விளையாடக்கூடாதா? பணமும், பவுஷும் இருந்து என்ன? ஒரு நிமிஷமாவது சந்தோஷமும் மனச் சாந்தியும் கிடையாது!' கலக்டர் படார் என்று கதவைச் சாத்திக் கொண்டு, மோட்டாரில் போய் ஏறிக்கொண்டார். அறையினுள் விம்மி விம்மி அழும் சப்தம் கேட்டது!

இதற்குள் குழந்தைகள் "அம்மா! அம்மா! டிபன் சாப்பிடலாமா?" என்று கூக்குரலிட்டுக் கொண்டு ஆவலாய் ஓடி வந்தார்கள். தாயார் கணவன் மேல் வந்த கோபத்தை குழந்தைகள் மேல் சாட்டி, இரண்டையும் கிள்ளி அடித்து விட்டு. கதவைத் தாளிட்டுக் கொண்டாள். குழந்தைகள் ஓவென்று அலறிக்கொண்டு, தாதியிடம் ஓடின! பக்ஷணங்கள் மேஜையில் அப்படியேகிடந்தன.

கமலாவின் உள்ளத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சி பொங்கிற்று. முகம் வெட்கத்தால் சிவந்தது. 'சீ, நான் எவ்வளவு அசடு!' என்று சொல்லி சிரித்துக்கொண்டே, தன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும், கணவனையும் குழந்தைகளையும் நினைத்து வீட்டை நோக்கி, வேகமாக நடந்தாள்.

சபதம்

★

மஹாகவி டாகூர் எழுதியது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

5

என் கணவருக்கு இப்பொழுது வைத்திய வேலை சற்று குறைய ஆரம்பித்தது. அதிக தூரத்திலிருந்து யாராவது வந்து கூப்பிட்டால் அவர் போவது கிடையாது அருகில் உள்ள இடத்திற்குப் போனுலும் சட்டென்று வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பி விடுகிருர். முன்பெல்லாம் வேலையில் ஓய்வு கிடைத்த பொழுது சாப்பிடவும் தூங்கவும தவிர, அவர் ஹாலை விட்டு வரமாட்டார். இப்பொழுது மாமியும் அவரை அடிக்கடி கூப்பிட்டனுப்புகிருள், அவரும் சற்றைக்கொருமுறை ஹாலை விட்டு வருகிருர். மாமி ரத்த குரலில் "ஹேமாங்கினி என் வெற்றிலைப் பெட்டியைக் கொஞ்சம எடுத்து வா" என்று கூப்பிடுவாள், அச்சமயம் மாமியின் அறையில் என் கணவர் வந்திருக்கிருர் என்று தெரிந்து கொள்வேன். முதல் இரண்டு மூன்று நாட்கள் மாமி எடுத்து வரச் சொன்னதை உடனே கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஆனல் அதன் பிறகு மாமி எவ்வளவு உரத்த குரலில் கூப்பிட்டாலும் ஹேமாங்கினி தன்னிடத்தை விட்டு அசைவதேயில்லை, மாமி கேட்ட பொருளை வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பி விடுவாள். மாமியின் உரத்த குரலைக் கேட்டதும் ஹேமாங்கினி என்னைச் சேர்த்துக் கட்டிக் கொள்வாள். அச்சமயம் அவள் மனதில் ஏதோ புகுந்து அவளை பயமுறுத்துகிறது. அவள் எவ்வித மறதியினுலும் எனக்கு எதிரில் என் கணவருடன் எவ்வித சர்ச்சையும் செய்வதில்லை.

என் சகோதரன் என்னைப் பார்க்க வந்திருந்தான். அவன் வெகு நுட்ப புத்தியுடையவன் என்பது என்க்குத் தெரியும். இங்கு நடப்பதை அவனிடம் மறைப்பது முடியாத காரியம். அவன் எப்பொழுதும் நியாயமாகவே நடப்பான். சிறிய குற்றத்தையும் அவன் மன்னிக்க மாட்டான் சகோதரன் எதிரில் என் கணவர் குற்றவாளியாக இருக்கிருரே என்று எனக்கு அதிக பயமுண்டாயிற்று. என் சகோதரனிடம் எல்லா விஷயங்களையும் என்னல் முடிந்தவரை மறைத்தே வைத்திருந்தேன். அவன் சந்தோஷமாக இருக்க வேணடுமென்று மிகவும் பாடுபட்டேன். ஆனல் என் கணவருடைய நடத்தையால் நான் அப்படிச் செய்வதும் முடியாமல் போயிற்று. ஆனல் அவன் அதிகநாள் தங்கவில்லை.

சகோதரன் ஊருக்குப் போய் விட்டான். அவன் ஊருக்குப் போவதற்கு முன் மிகவும் அன்புடன் என சிரசில் தடவிக் கொடுத்தான். அவன் மனப்பூர்வமாக ஆசிர்வதித்தானு என்பது எனக்குத் தெரியாது. ஆனல் கண்ணீரால் நனைந்த என் கன்னத்தில் அவன் கண்ணீர் சிந்தியது மாத்திரம் எனக்குத் தெரியும.

எனக்கு அன்றைய நினைவு வருகிறது. சித்திரைமாதம் மாலை மங்கிய சமயம் சந்தையிலிருந்து எல்லோரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். மழை வருவதற்கு அடையாளமாகக் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. குளிர்ந்த காற்றுடன் மண்வாசனையும் கலந்து வந்து கொண்டிருந்தது, இருட்டில் ஜனங்கள் தம்தம் இஷ்டர்களை கூப்பிட்டுக் கொண்டிருந்தனர் அப்பொழுதும் என் அறையில் விளக்கு ஏற்றவில்லை. நான் தனிமையாக இருந்ததினுல் காற்றில் வேறு எங்கிருந்தாவது நெருப்புப் பொரி பறந்து என் புடவையிலோ, அறையிலோ விழுந்து ஏதாவது நஷ்டப் படுததிவிடப் போகிறதே என்று பயந்தேன். நான் அந்த இருண்ட அறையிலிருந்து கருந்த மேகத்தைப் பார்த்து கைகுவித்து பகவானை பிரார்த்திககலானேன். பிரபோ! தங்களைப் பூஜிக்காமலும் தங்களுடைய திருவிளையாடல்களைத் தெரிந்து கொள்ளாமலும் என் இருண்ட ஹிருதயத்தில் உதித்தபடி இரண்டு கைகளாலும் மென்னியை அமுக்கிக் கொள்கிறேன். என் கண்டத்திலிருந்து ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தாலும், என் மனதிலிருந்து அந்தக கலவரப்புயல் மாத்திரம் அகலவே இல்லை இன்னமும் நீர் என்னை எவவளவு காலம் வரை பரிசோதிக்கப் போகிறீரோ! அந்தத் துன்பங்களை அனுபவிக்க எனக்குச் சக்தி ஏது! என்று பகவானிடம் முறையிட்டுக்கொண்டிருந்த சமயம் என் கண்களில் கணணீர் ஆறு போல் பெருக்கெடுத்தது. கட்டிலின் சட்டத்தில் தலையைச் சாய்த்துக் கொண்டு அழலானேன். நாள் முழுவதும் வீட்டுவேலைகளைக் கவனிக்கவேண்டி இருக்கிறது. ஹேமாங்கினி என் நிழலைப் போல என்னை விட்டு அகலாமல் சுற்றிக்கொண்டே இருந்தாள். மனதிலிருந்து வருத்தததின் சுமை தலை தூக்கி மேலே எழுகிறது. ஆனல் அதை நினைத்துச் சிந்திக்க நேரமில்லை. இன்று வெகு நாட்களுக்குப்பிறகு கண்களில் அடங்கியிருந்த கண்ணீர் வெள்ளம பெருக்கெடுக்கச் சமயம் கிடைத்தது. அதே சமயம் என் கட்டில் சற்று அசைவது போலவும், யாரோ என் அறையில் நடமாடுவது போலவும் தோன்றியது. சிறிது நேரத்திற்குப் பிறகு ஹேமாங்கினி என்னை இருக்கத் தழுவி மௌனமாகத் தன் முந்தாணியால் என் கண்ணீரைத் துடைத்தாள். அவள் என் கட்டிலில் மாலையே வந்து படுத்திருந்தாள். என்று எனக்குத் தெரியாது. அவள் என்னிடத்தில் எதுவும் சொல்லவில்லை. நானும் பேசவில்லை. அவள் மௌனமாக என் கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். மேகம் இடி இடித்தது. மழை பெய்தது ஒன்றும் எனக்குத் தெரியாது. பல நாட்களாக வாடியிருந்த என் ஹிருதயத்தை அன்று அவள் அன்பு நிறைந்த கைகளால் ஸ்பர்சித்து மலரச் செய்தாள்.

மறுநாள் காலை ஹேமாங்கினி "சித்தி, நீ ஊருக்கு வராவிட்டால் போகிறது, நான் நாளைக்கு அண்ணனுடன் போகிறேன்— சொல்லி வைக்கிறேன்" என்றுள்.

"அவனுக்கு எதற்குத் தொந்திரவு, நாளைக்கு நானும் தான் ஊருக்குவரப்போகிறேன். இதோ பார்த்தாயா? ஹரீஷ் உனக்காக இந்த முத்து மோதிரத்தை வாங்கிவந்திருக்கிருன்" என்று சொல்லி ஹேமாங்கினியின் கையில் மோதிரத்தைக் கொடுத்தாள் மாமி.

ஹேமாங்கினி சட்டென்று "பார் சித்தி, உன் மனதில் என்றைக்கும் ஞாபகமிருக்கும்படி செய்கிறேன்" என்று சொல்லி அவள் ஜன்னல் வழியாகக் குட்டைப் பக்கம் மோதிரத்தை எறிந்துவிட்டாள். அச்சமயம் மாமிக்கு, கோபம், துக்கம், ஆச்சரியம எல்லாம் ஒருங்கே சேர்ந்து பொங்கி எழுந்தன.

மாமி பயத்துடன் என் கையைப் பிடித்துக்கொண்டு "பார் அம்மா, இவள் சிறு பிள்ளைத் தனமாகச் செய்ததை ஹரீஷிடம் சொல்லாதே. அவனுக்குத்தெரிந்தால் மிகவும் கஷ்டப்படுவான்— நீ என்மீது ஆணையாக அவனிடம் சொல்லமாட்டேன் என்று சொல்" என்றுள்.

"மாமி, நீங்கள் எனக்குச் சொல்லத் தேவையில்லை. நான் அவரிடம் இதையெல்லாம் சொல்லமாட்டேன்" என்றேன் நான்.

மறுநாள் ஹேமாங்கினி ஊருக்குப் போவதற்குமுன் என்னை மார்புடன் தழுவிக்கொண்டு "அக்கா, என்னை மறந்துவிடக் கூடாது. நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்றுள். நான், என் இரு கரங்களாலும் அவள் தேகத்தைத் தடவிக் கொடுத்து "அம்மா, குருடர்கள் எப்பொழுதும், எந்த விஷயத்தையும் மறக்கமாட்டார்கள். என் வரை உலகமே சூன்யமாகயிருக்கிறது நான் ஒருவருடைய மனதிற்குத்தான் ஆதரவாயிருக்கிறேன்" என்று சொல்லி அவள் முகத்தை என் முகத்தருகில் பிணைத்து உச்சி முகர்ந்தேன். என் கண்களிலிருந்து பெருகிய நீர்த் துளிகள் அவள் கூந்தலையே நனைத்துவிட்டன.

6

ஹேமாங்கினி போன பிறகு எனககு ஒன்றுமே பிடிககவில்லை. 'ஆத்மா சாந்தி அடையக்கூடிய பொருளையும், குயிலைப் பழிக்கும் குரலையும, வசீகரத தன்மையைப் படைத்த அழகையும் அவள் என்னிடம் கொண்டு வந்தாள்-போகும் பொழுது அவை எல்லாவற்றையும் எடுத்துச் சென்று விட்டாள். அவள் சென்ற பிறகு என் வாழ்க்கையில் என்னுடன் கூடியிருப்பவர்கள் யாராகிலுமிருக்கிருர்களா என்று என் கைகளை நீட்டித் துலாவிப் பார்த்தேன். அச்சமயம் என் கணவர் அருகில் வந்து "அவர்கள் போய் விட்டார்களா? பிழைத்தேன்! சற்று வேலை செய்யச் சமயம் கிடைத்தது" என்ருர்.

ஹா கடவுளே! எனக்கு மிகவும் அவமானமாய் இருக்கிறது. என்னிடத்திலா இவ்வளவு சாமர்த்தியம் காட்டுகிருர்? என் கணவர் உண்மையாகவா என்னிடம் பயப்படுகிருர்? துன்பததினுல நான் எப்பொழுதாவது பயந்ததுண்டா? என் கண்களைப் போக்கிக்கொண்ட சமயம், நான் எப்பொழுதுக்கும் சாந்த மனதுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று அவருக்குத் தெரியாதா?

அவ்வளவு நாட்கள் வரை எனக்கும் என் கணவருக்கும் நடுவில் திரை ஒன்று விடப்பட்டிருந்தது. ஆனல் அன்று முதல் ஒரு புது படுதாவும் எங்கள் நடுவில் உற்பத்தியாகியது. கணவர் சற்று மறதியாகக்கூட என் எதிரில் ஹேமாங்கினியின் பேச்சை எடுப்பதில்லை. அவர் வாழ்க்கையிடையே ஹேமாங்கினி எங்கோ மறைந்து கொண்டிருநதாள்— அதில் சிறிதுகூடச் சந்தேகமில்லை! ஆனல் நான் அவர்களிடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது என்று எணணினேன். குளததில் நீர் அதிகமாகிற சமயத தாமரைத் தண்டிலும் தணணீரை இழுக்கும் சக்தியும் அதிகமாகிறது. கணவருடைய மனதில் மாறுதல் உற்பத்தியானதும நான் என் ஹிருதயத்தின் சக்தியால் அதைக் கிரஹித்துக் கொண்டேன். ஹேமாங்கினியிடமிருந்து கடிதம எப்பொழுது வந்தாலும் கணவர் என்னிடம் மறைப்பதில்லை நானும் அதைக குறித்து ஏதும் வாதாடுவதுமில்லை. என இருள் படர்ந்த ஹிருதயத்தில், மதம் பிடித்த அடக்க முடியாத மாசற்ற அழகிய அந்தப் பிரதிபிமபம் பதிந்திருந்தது. அதனிடமிருந்து க்ஷேம சமாசாரத்தை வரவழைக்கவும அதன் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்தவும் என் ஆத்மா துடி துடித்துககொணடிருந்தது. ஆனல் என் கணவரின் முன் அதன் பெயரை ஒரு முறை கூட எடுக்க மனம் இடம் கொடுக்கவில்லை. எனக்கும என் கணவருக்கும் நடுவில் வேதனையால் நிரப்பப்பட்ட ஸ்திரமான வஸ்து இருந்து வந்தது.

வைகாசி மாதம் பிறந்து பதினைந்து தேதிக்கு மேல் இருக்கும். மூலைக் காற்று அதிகமாக இருந்தது அன்று மத்தியானம் என் வேலைக்காரி வந்து "அமமா, படித்துரையில் படகொன்று தயாராகியிருக்கிறது. பாபு எங்கே போகப் போகிருர்?" என்று கேட்டாள்.

என் கணவர் எங்கே போகப் போகிருர் என்பதை அனுமானித்துத் தெரிந்துகொண்டேன். ஆனல் நான்அவளுககு யாதொரு பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தேன். என் வாழ்க்கையின் மத்தியில் என்னுடன உறவு கொண்டாடிக்கொண்டு சில நாட்களாகவே ஒரு ஜடமான பொருள் இருந்து வந்தது. நான் குருடியாவதற்கு முன் பிரளய

வி. எஸ். வெங்கடேசன் மொழிபெயர்ப்பு

மொன்று வந்து என் ஹிருதயத்தில் மோதிக்கொண்டிருந்ததைப் போல் அப்பொழுது இருந்தது. அழிவு காலத்தின் சாயைகளெல்லாம் ஒன்று கூடி என் தலை மீது ஏறிக்கொண்டன.

நான் வேலைக்காரியிடம் எனக்கு ஒன்றும் தெரியாதவள் போல "அவர் என்னிடம் இதுவரைப் பிரயாணத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே" என்றேன்.

அவளுக்கு என்னிடம் வேறு தர்க்கம் செய்ய தைரியமில்லை. அவள் ஒரு நீண்ட பெருமூச்சை வெளிக்கிளப்பிய வண்ணம் அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள்.

இரவு வெகு நேரமான பிறகு கணவர் என்னருகில் வந்து "வெகு தூரத்திலிருந்து ஒருவர் விருந்துக்கு அழைத்திருக்கிறார். நாளைக்காலையிலேயே நான் அங்கு போகவேண்டும். அங்கிருந்து திரும்பிவர இரண்டு மூன்று நாட்கள் ஆகக்கூடும் என்று நினைக்கிறேன்" என்றார். நான் கட்டிலிலிருந்து கீழே இறங்கி நின்றுகொண்டு படபடப்புடன் "என்னிடத்தில் ஏன் பொய் சொல்கிறீர்?" என்று கேட்டேன்.

அவர் திடுக்கிட்டு "நான்பொய்யா சொல்லுகிறேன்?" என்று கேட்டார்.

"நீர் கலியாணம் செய்துகொள்ளப் போகிறீர்!"

அவர் மௌனமாயிருந்தார். நானும் அசைவற்று நின்றிருந்தேன். வெகு நேரம்வரை அவ்வளவு நிசப்தமாயிருந்தது. நான் திரும்பவும் "ஒரு வார்த்தை மாத்திரம் உண்மையாகச் சொல்லவேண்டும். நீர் கலியாணம் செய்துகொள்ளத்தானே போகிறீர்? 'ஆமாம்' என்று சொல்லுங்கள்" என்றேன். அவர் பதிலுக்குச் சாவதானமாக "ஆமாம், கலியாணம் செய்துகொள்ளத்தான் போகிறேன்" என்றார்.

"முடியாது! உங்களைப்போக விட்மாட்டேன். 'இந்த விபத்திலிருந்தும், பாபத்திலிருந்தும் உங்களை நான் காப்பாற்றுவேன். அவ்வளவு கூட என்னால் செய்ய முடியாவிட்டால் உங்களுடைய மனைவியாயிருந்து என்ன பிரயோஜனம்! நான் செய்யும் சிவ பூஜை தான் எதற்கு!"

திரும்பவும் வெகுநேரம் வரை அதே நிசப்தம்! நான் அவர் கால்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "உங்களுக்கு என்ன தப்பு செய்தேன்? மறதியாக ஏதாவது நடந்துகொண்டேனா? மறு விவாகம் செய்துகொள்ளவேண்டிய அவசியமென்ன? என்மீது ஆணையாக உண்மையைச் சொல்லுங்கள்" என்றேன்.

என் கணவர் மெதுவாக "உன்னிடம் எனக்கு பயமாகயிருக்கிறது. உண்மையாகச் சொல்லுகிறேன். உன் எல்லையற்ற அன்பு ஒரு கோட்டையைப்போலிருக்கிறது. அதனுள் என்னால் புக முடியாது, நீ என்னைப்பற்றிய வரை ஒரு தெய்வம். மேலும் தேவதையைப்போலவே என் கண்ணுக்குத் தென்படுகிறாய். உன்னைக்கொண்டு என் வீட்டு வேலைகளைச்செய்து கொள்ள நான் இஷ்டப்படவில்லை. வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு சாதாரண பெண்ணைத்தான் நான் விரும்புகிறேன்" என்றார்.

"கொஞ்சம் என் ஹிருதயத்தைப் பிளந்து பாருங்கள்— நானும் ஒரு சாதாரணமான பெண்தான். உங்களுடைய புது மனைவி யார் என்பது எனக்குத் தெரியும்—ஹேமாங்கினி! என் பூரண அன்பைக் காட்ட எண்ணுகிறேன், இணைபிரியாமலிருக்க நினைக்கிறேன், தங்களை பூஜை கூடச்செய்கிறேன். உங்கள் வாயால் என்னைப் புகழ்ந்து பேசிவிட்டுத் திரும்பவும் என்னை துக்கசாகரத்தில் தள்ளிவிடாதீர்கள். எல்லா விஷயத்திலும் என்னை உங்கள் அடிமையாகவே பாவியுங்கள்"

அச்சமயம் நான் அவரிடம் இன்னும் என்னென்ன சொன்னேன் என்பது இப்பொழுது என் நினைவுக்கு வரவில்லை. சஞ்சலமடைந்த சமுத்திரம் அதன் கோஷத்தை தானே கேட்டுக்கொண்டிருக்க முடியுமா? கேவலம் இந்த விஷயங்கள் தான் நினைவுக்கு வருகின்றன.

"நான் உங்களுடைய ஸஹதர்மிணி. நீங்கள் எந்த விதத்திலும் உங்கள் கடமையிலிருந்து பிசகமாட்டீர் என்று பகவான் சாட்சியாகச் சொல்லுவேன். நான் தங்களை இழந்து விதவையானாலும் ஹேமாங்கினியை என் வாழ்க்கையில் குறுக்கிடும்படி விட மாட்டேன்" என்று இதை மாத்திரம் சொல்லிவிட்டு நான் மூர்ச்சையாகி விட்டேன்.

நான் மூர்ச்சை தெளிந்து எழுந்த சமயம் பொழுது விடிந்து விட்டது என்று பட்சிகளின் அறை கூவல்களினால் தெரிந்து கொண்டேன். கணவர் என பேச்சைத் தள்ளிவிட்டு அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளப்போய் விட்டார்.

நான் பூஜை அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டு, பூஜை செய்ய உட்கார்ந்து கொண்டேன். நாள் முழுவதும் அந்த அறையை விட்டு வெளியில் வரவேயில்லை. வைகாசி மாதத்தின் மாலை காற்றினால் கதவு அசைந்தது. பகவானே! என் கணவருடைய படகு காற்றினால கவிழ்ந்து நதியில் மூழ்கித் தவித்துக் கொண்டிருப்பார். அவரை காப்பது உமது கடமை" என்று என் கணவருக்காகக் கடவுளிடம் 'இந்த வரனைக் கேட்பதற்கு பதிலாக 'ஏ பரமாத்மா என் பாக்கியத்தில் இன்னும் எது எது நடக்க வேண்டுமோ அவைகளை உன் இஷ்டம் போல் நடத்திவை' என்று பிரார்த்திக் கொண்டிருந்தேன். அன்று இரவும் கழிந்து மறுநாளாகியும் நான் அந்த அறையை விட்டு வெளி வரவில்லை. உட்கார்ந்திருந்த இடத்தை விட்டும் எழவில்லை. பரம்பொருளாகிய அந்த மூர்த்தியின் முன் நான் பதுமைபோல உட்கார்ந்திருந்தேன். ஆகாரம், நித்திரை களை விட்டிருக்க அச்சமயம் எனக்கு யார்தான் சக்தி கொடுத்துதவினார்களோ—எனக்குத் தெரியாது! நான் அங்கேயே ஜீவனற்றுப் படுத்துவிட்டேன்.

என் மூர்ச்சை தெளிந்ததும் யாரோ "அக்கா!" என்று என்னைக் கூப்பிடுவது போலிருந்தது. அக்குரலினால் ஹேமாங்கினி என்று தெரிந்துகொண்டேன். மேலும் அவள் மடியில்தான் என் தலையுமிருந்தது. தலையைச் சற்று அசைத்தபொழுது புதுப் பட்டுப் புடவையின் 'கச முச' சப்தம் கேட்டது. அவளுடைய கலியாணம் தடங்கலின்றி நடந்தேறியது என்று தெரிந்துகொண்டேன். "ஏ பரமேஸ்வரா! என் பிரார்த்தனை உன் காதில் விழவில்லையா? என் கணவருடைய எண்ணம் பூர்த்தியாகிவிட்டது" என்று என் மனதில் எண்ணிக் கொண்டேன்.

ஹேமாங்கினி தலையைச் சாய்த்து மெல்லிய குரலில் "அக்கா, உன்னிடம் ஆசீர்வாதம் பெற வந்திருக்கிறேன்" என்றாள்.

முதலில் நான் அதைக் கேட்டுப் பிரமித்துவிட்டேன். பிறகு மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக்கொண்டு "ஏன் அம்மா, உனக்கு நான் ஆசீர்வாதம் செய்யமாட்டேனா! உன் மேல் என்ன குற்றம்!" எனறேன்.

ஹேமாங்கினி சிரித்துக்கொண்டே ஹாஸ்யம் நிறைந்த குரலில் "குற்றம்! ஏன் அக்கா நீ கலியாணம் செய்துகொண்டால் குற்றமில்லை, நான் செய்துகொண்டால் குற்றமா?" என்று சொல்லிக்கொண்டே மேலும் வேகமாகச் சிரித்தாள்,

நானும் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு சிரித்தேன். வாழ்க்கையில் என் வேண்டுகோள் தானா எல்லாவற்றிற்கும் மேல்? வேற்றவர்களுடையது அதையும்விடமேலானதில்லையா? பாரமெல்லாம் என் தலையில் தானா விழ வேண்டும்! ஆனால் எனக்கு எந்த ஹிருதயத்தில் அன்பும் கடமையுமிருக்கின்றனவோ, அதை மாத்திரம் விட்டுக் கொடுக்கமாட்டேன். நான் எப்படியிருக்கிறேனோ அப்படியேதான் இருப்பேன்: என்று மனதினுள்ளேயே சொல்லிககொண்டேன். ஹேமாங்கினி எனக்கு நமஸ்காரம செய்து பாத தூளியை எடுத்து நெற்றியில் ஏற்றுக் கொண்டாள். "நீ என்றும் சுகமாயிரு. தீர்கக சுமங்கலியாக இருக்க வேண்டும்" என்று ஆசிர்வதித்தேன்.

"இந்த ஆசீர்வாத[illegible] ஒன்றும் நடந்துவிடாது. நீ பதிவ்ரதையாதலால் உன் கையினால் எங்கள் இருவர் கைகளையும் ஒன்று சேர்த்து ஆசீர்வாதம் செய். அவரிடம் வெட்கப்பட்டால் பிரயோசனமில்லை. அவரைக் கூப்பிட்டுக்கொண்டு வரட்டுமா, சொல்லு" என்றாள் ஹேமாங்கினி.

"கூப்பிட்டுக்கொண்டு வா" என்றேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் என் அறையில் யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டது. வந்தவர் அன்பு நிறைந்த குரலில் "குஸும், சௌக்கியமாயிருக்கிறாயா?" என்று கேட்டார்.

நான் திடுக்கிட்டு எழுந்து அவரை நமஸ்காரம் செய்து "இருக்கிறேன் அண்ணா" என்றேன்.

"அண்ணா, என்று ஏன் கூப்பிடுகிறாய் அக்கா? இவர் உன் சகோதரியின் கணவரில்லையா!" என்று ஹேமாங்கினி வினயமாகக் கேட்டாள்.

எல்லா விஷயங்களும் எனக்குத் தெரிந்துவிட்டது. என் சகோதரன் கலியாணமே செய்துகொள்ளமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்துகொணடிருந்தான். அவன் அப்படியே நடப்பான் என்று எணணிக்கொண்டிருந்தேன். என் தாயாரும் இறந்துவிட்டாள் அவளுக்குப் பிறகு என் சகோதரனுக்காக முயற்சி எடுத்துக் கொண்டு யார் அந்த தம்பதிகளை ஒன்று சேர்த்து வைக்கப் போகிறார்கள்! அதனால் அச்சமயம் நானே அவர்கள் இருவரையும் ஒன்றாகச் சேர்ந்து வைத்தேன். என் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகின. அதை எவ்விதத்திலும் தடுக்க முடியவில்லை சகோதரன் மெதுவாக என் சிரசின் மீது தடவிக் கொடுத்தான் ஹேமாங்கினி என்னைக் கட்டிக்கொண்டு சிரித்தாள்.

இரவு வெகுநேரமான பிறகு என் அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. நான் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். காலடிச்சப்தத்தினால் உள்ளே வந்தவர் என் கணவர் என்று தெரிந்து கொண்டேன்—என் மனம் படபடத்தது.

கணவர் என் கட்டிலில் வந்து உட்காாந்து மெதுவாகக் கையைப் பிடித்துக்கொண்டு, "உன் சகோதரன் என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றினான். நான் சிறிது நேரத்திய ஆனந்தத்தை எண்ணி படுகுழியில் விழுந்து மடியப் போனேன். அன்று நான் படகில் ஏறும் சமயம், என்மனதில் என்னென்ன எண்ணங்கள் உதித்தன என்பது அந்தக் கடவுளுககுத் தான் தெரியும்! படகு நதியின் நடுவில் போகும் சமயம் என் உயிரைப்பற்றியும் பயந்தேன். அதனுடனேயே 'நதியில்விழுந்து உயிர் துறந்தால் இப்பந்தத்திலிருந்து விடுதலை அடைந்துவிடுவேன்' என்றும் எண்ணினேன். மதுரங்கஜ் போனதும் முதல் நாளே ஹேமாங்கினிக்கும் உன் அண்ணனுக்கும், கலியாணமாகிவிட்ட செய்தியை கேட்டேன். அச்சமயம் எத்தகைய வெட்கத்துடனும் ஆனந்தத்துடனும் படகுக் கரைக்கு வந்தேன் என்பதை என் வாயினால் சொல்ல இயலாது. இந்த இரண்டு மூன்று தினங்களிலேயே வாழ்க்கையில் உன்னைத் தவிர வேறு யாரும் எனக்குத் துணையாகயிருக்க முடியாது என்று தெரிந்து கொண்டேன். நீ என் பிரத்தியக்ஷ தேவதை" என்றார்.

நான் சிரித்துக்கொண்டே "இல்லை, இல்லை! என்னைத் தேவதையாக்க வேண்டிய அவசியமில்லை. நான் உங்களுடைய மனைவி உலகத்தில் உள்ள எல்லாப் பெண்களைப் போன்றவள் தான் என்றேன்.

"அப்படியானால் நீயும் என் பேச்சொன்றைக் கேட்கவேண்டும். இனி மேல் என்னை ஸ்வாமி என்று கூப்பிட்டு என் உற்சாகத்தைப் பங்கப்படுத்தக் கூடாது"

மறுநாள் எங்கள் வீட்டில் விருந்தொன்று நடந்தது. ஹேமாங்கினியுடன் என் கணவர் விளையாடுவதற்கும் பேசுவதற்கும் குறைவே கிடையாது. ஆனால் என் கணவர் அந்த இரண்டு மூன்று தினங்கள் எங்கே போயிருந்தார். அங்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி யாரும் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை..

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரிதம்—2

I

பல்லவி

சூடரே செலுலாரா யமுனாதேவி
ஸொகஸெல்ல ஸந்தோஷமுன

அனு பல்லவி

எர்ரனி பங்கேருஹமுலே அந்து
யிம்பைன ப்ருங்க நாதமுலே

சரணம்

1. இஸுகதின்னெ லெந்த தெலுபே மேனு
யிந்த்ர நீலமுவம்டி நலுபே
2. மேடிகலு வஜ்ரம்பு சிலலே அந்து
குடிலமைன சின்னி யலலே
3. ஹம்ஸல ரவளிசே சாலதேவி
யதிகோ செலங்கேனீவேள
4. பொலதுலார பொத ரிண்ட்லே தேனே
லொலுகு கர்ஜூரபு பண்ட்லே
5. பலமுலசே த்ராக்ஷ லதலே அந்து
பச்சனி சிலுகல ஜதலே
6. விந்த விந்த விரில வானமதி
கெந்தெந்தோ மருலய்யேனே
7. கோகிலமுலு ம்ரோஸென மருடு
குஸும சரம்பு வேஸெனே
8. சல்லனி மலயமாருதமே க்ருஷ்ண
ஸ்வாமினி கூடேதி ஸதமே
9. ராஜ வதனலார கனரே த்யாக—
ராஜ ஸகுனி பாட வினரே

II

செலுலாரா	—சகோதரிகளே!
யமுனாதேவி ஸொகஸெல்ல்	—யமுனா நதியின் அழகையெல்லாம்
ஸந்தோஷமுன சூடரே	—சந்தோஷத்துடன் பாருங்கள்.
எர்ரனி	—சிவந்த நிறமுள்ள
பங்கேரு ஹமுலே	—தாமரை மலர்களுடன் விளங்கியும்
அந்து	—அத்தாமரை மலர்களில் உள்ள தேனைப் பருகி
ப்ருங்க	—வண்டுகள்
யிம்பைன நாதமுலே	—இனிமையான ரீங்கார சப்தத்துடன் விளங்குகிறது.
இஸுக தின்னெலு	—இந்த யமுனைக் கரையோரங்களிலும் நடுவிலுமுள்ள மணற் திட்டுகள்
எந்த தெலுபே	—எவ்வளவு வெண்மை நிறமாகத் தோற்றமளிக்கிறது; பாருங்கள்!
மேனு	—இந்த யமுனாதேவியின் சரீரம் அதாவது இந்தப் புண்ய தீர்த்தம்
யிந்த்ர நீலமு வண்டி	—இந்த்ர நீலக் கல்போன்ற
நலுபே	—கரு நிறம் கொண்டு விளங்குகின்றது.
மேடிகலு	—படித்துறை
வஜ்ரம்பு சிலலே	—வஜ்ரம்போன்ற உறுதியான கற்களால் கட்டப்பட்டு விளங்குகிறது.
அந்து	—அந்தப் படிகளில்
குடிலமைன சின்னியலலே	—வேகமில்லாத சிறு சிறு அலைகள் மோதும் அழகைப் பாருங்கள்.
ஹம்ஸல ரவளிசே	—அன்னப் பறவைகளின் நாதத்துடன்
ஈவேள	—இத்தருணம்
தேவி	—யமுனா தேவி
அதிகோ சால செலங்கன்	—அதோ மிகவும் பிரகாசிக்கிறாள்.
பொலதுலார	—பெண்மணிகளே!
பொத ரிண்ட்லே	—இந்நதியின் கரையிலுள்ள புதர்களில்
தேனெலொலுகு	—தேன் ஒழுகும்
கர்ஜூரபு பண்ட்லெ	—பேரீச்சம் பழங்கள் கொண்ட மரங்கள் விளங்குகின்றன.

நீதிக் கதை

கொடுமையும் மரணமும்

★

ஏ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

உயர்தரக் கலாசாலை விஷயங்களில் மட்டுமல்லாமல் மற்ற விஷயங்களிலும் அப்பு தலையிட்டு வந்தான். தெருவில் அலைந்து திரிந்து கொண்டிருந்த இருபது நாய்களைப் பிடித்து ஒரு வண்டியிலடைத்து கொல்வதற்காகக் கொண்டுபோவதை அப்பு பார்த்தான். நகர பரிபாலன சபையார் அவைகளைக் கொல்வதற்காக அவ்வாறு வண்டியிலடைத்துக் கொண்டு போனார்கள். அந்த நாய்களோ தப்பி ஓடுவதற்கு அதிக பிரயாசைப் பட்டுக்கொண்டிருந்தன. அவை படும் கஷ்டத்தைக் கண்டு அப்பு மனம் வருந்தினான். அந்த வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றவன், வண்டியை நிறுத்தி விட்டு, சோடா குடிப்பதற்குச் சென்றான். அவன் சோடா குடித்துவிட்டு வருவதற்குள், வண்டியின் கதவுகளைத் திறந்து அப்பு நாய்களை வெளியே விட்டு விட்டான். வண்டிக்காரன் வருவதற்குள், அவன் கண்ணில் படாமல் அப்பு மறைந்து கொண்டான். ஆனால் அந்தக் காரியத்தை அப்பு தான் செய்திருக்க வேண்டுமென்று எல்லோரும் நினைத்தனர். உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த துரைத்தன உத்தியோகஸ்தர் ஒருவர் நகர பரிபாலன சபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். அவர் அப்புவைக் கூட்டிக்கொண்டு வரும்படிச் சொன்னார். அப்புவின் மீது குற்றஞ்சாட்டப் போவதாக அவர் அப்புவிடம் சொன்னார். 'நீ செய்யத்தகாத காரியத்தைச் செய்திருக்கிறாய். ஒன்றுக்கும் உதவாத இந்த நாய்களைக் கொல்வது வழக்கம். இந்த நாய்களினால் நகர வாசிகளுக்கு அதிக உபத்திரவமேற்படுவதனால் தான் இவைகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது' என்று தலைவர் சொன்னார். 'தங்களுக்கு வயதான பிறகு, ஒன்றுக்கும் உதவாத போகும் சமயத்தில், தங்களைக் கொல்ல தாங்கள் அனுமதி கொடுப்பீர்களா? ஜீவஹிம்சை நேரிடாமல் காப்பாற்றுவதையே நோக்கமாகக் கொண்ட சங்கத்திற்கும் தாங்கள் தலைவரல்லவா? வாயில்லாத இந்த நாய்களை ஹிம்சை செய்வது தர்மமா? நன்றாக யோசித்துப் பாருங்கள்' என்று அப்பு எடுத்துக் கூறினான். 'நாங்கள் அவைகளை துன்பத்திற்காளாக்காமல் கொல்கிறோம்' என்று தலைவர் பதிலளித்தார். 'கொல்வது கொடுமையல்லவா?' என்று அப்பு கேட்க, 'துன்பத்திற்காளாக்காமல் கொல்வது கொடுமையாகாது' என்று தலைவர் கூறினார். 'ஆனால் துன்பமடைவதைவிட இறப்பது மேல்

பல மூலசே த்ராக்ஷலதலே

அந்து
பச்சனி சிலுகல ஜதலே

விந்த விந்த விருல வானே

மதிகின்
எங்தெங்தோ மருலய்யேனே
கோகிலமுலு ம்ரோஸெனே
மருடு
குஸும சரம்பு
வேஸென
சல்லனி மலயமாருதமே

க்ருஷ்ணஸ்வாமினி
கூடேதி ஸதமே
ராஜ வதனலார!

கனரே
த்யாகராஜ ஸ்குனி
பாடவினரே

—பழுத்த பழங்களுடன் கூடிய திராக்ஷைக் கொடிகள் காணப்படுகின்றன பாருங்கள்
—அம்மரஞ் செடி கொடிகளில்
பச்சை நிறங்கொண்ட கிளிகள் ஜோடி ஜோடி
—யாய் உட்கார்ந்து விளையாடுகின்றன பாருங்கள்!
—இந்நதிக் கரையிலுள்ள புஷ்ப விருக்ஷங்களிலிருந்து ஜலத்தில் பலவித புஷ்பங்கள் உதிரும் அழகைப் பாருங்கள்
—மனதுக்கு
—எவ்வளவோ இன்பமூட்டுகிறது.
—குயில்கள் கூவுகின்றன.
—மன்மதன்
—புஷ்ப பாணங்களை
—நம்மேல் எய்கின்றனே!
—குளிர்ந்த [மலயமாருதம்] தென்றல் காற்று வீசுகிறது
—பகவானை க்ருஷ்ண பரமாத்மாவை
—நாம் கூடுவது நிச்சயமே.
—சந்திர பிம்பம்போன்ற அழகுடைய பாவையர்களே!
—யமுனா நதியின் அழகைப் பாருங்கள்
—த்யாகராஜனின் தோழனான ஸ்ரீ கிருஷ்ணனின்
—வேணுகானத்தைக் கேளுங்கள்.

III

இது ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட நௌகா சரித்திரத்தின் 2-வது கீர்த்தனம், சில புஸ்தகங்களில் 3-வது கீர்த்தனமாகவும் காணப்படுகிறது. அது தவறு. முதல் கீர்த்தனத்தில் பகவானுடைய வேணுகானத்தைக் கேட்டு கோபிகாஸ்திரிகள் கண்ணனுடன் யமுனா தீரத்துக்குப் புறப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

இந்தக் கீர்த்தனத்திற்கு முன் காணப்படும்.

வாலாயம்புக நுடலாடுசு ஜெனுல்-வர்ணிஞ்சுசுன் னேகுசுன்
ஆலோலம்பகு புஷ்பவிருக்ஷமுலதோ-ஹம்ஸீ ஸமூஹம் புதோ
கீலாலம்புன ப்ருங்கநாத யுதமௌ-கெந்தம்மி ப்ருந்தம் புதோ
காலாம்போதர தீப்திதோட ஜெலகே-காளிந்திலின் காஞ்சுசுன்,

என்ற பாட்டில் கோபிகைகள் பகவத் சாமீப்யத்தை அடைந்ததால், இன்பங் கொண்டு தங்க ளிஷ்டம் போல் ஆடிக்கொண்டும் பகவானை வர்ணித்துத் துதித்துக் கொண்டும் சென்றார்கள். அப்பொழுது இளங்காற்றினால் அசைந்து கொண்டுள்ள புஷ்ப விருக்ஷங்களுடனும் அன்னப் பறவைகளின் கூட்டங்களுடனும் வண்டுகளின் ரீங்கார சப்தத்துடன் கூடி விளங்கும் சிவந்த தாமரை மலர்களையும் நீருண்ட மேகம் போன்ற கருத்த நிறத்துடன் பிரகாசித்து விளங்கும் காளிந்தி மடுவை வழியில் தரிசித்துக் கொண்டே கிருஷ்ணனுடன் யமுனா தீரத்துக்குச் சென்றனர்...என்று மேலே கண்ட விதம் கூறப்பட்டுள்ளது. இந்தக் கீர்த்தனத்தால் கோபியர்கள் யமுனைக் கரையை அடைந்த பின் அங்குள்ள காக்ஷிகளை அனுபவித்து வர்ணித்ததை ஸ்வாமிகள் குறிப்பிடுகிறார்.

சூடரே செலு லாரா:—ஜயதேவ ஸ்வாமிகள் இயற்றிய கீத கோவிந்தத்தில் 3-வது அஷ்டபதி முதலாவது சரணத்தில் பகவான் கோபிகைகளுடன் யமுனைக் கரையில் நர்த்தனம் செய்த தருணத்தில் அங்குள்ள விசேஷங்களை வர்ணித்துள்ளார். அக்காக்ஷிகளையே இன்னும் விரிவாக இந்தக் கீர்த்தனத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

யமுனா நதியின் சிறப்பு தெளிவாக இக்கீர்த்தனத்தில் கூறப்பட்டுள்ளதால் இதற்கு விரிவுரை தேவையில்லாது போயிற்று.

IV

ராகம் காமவர்த்தனி — தாளம் சாபு

(51-வது மேள ராகம் ஸம்பூர்ணம்)

பல்லவி

; ; தா	பா ; பா ;	பா பா ;	பா ; பா மா
சூ	ட ரே	செ லு	லா ர .
பா தா	நீஸா ஸா நீ	தா ஸா நீ	தா பா பா மா
ய மு	னா . . .	. . .	தே . வி .
பா பா	நீ தா மா மா	கா பா மா	கா ரீ கா ;
ஸொ க	ஸெல் . ல .	ஸங் . .	தோ . .
கா பா மா	காரீ ; ;	ஸா ; ;	; ; ; ;
ஷ மு .	ன .	.	

(அனுபல்லவி சரணங்களை இது போன்றே பாடவும்.)

என்று தாங்கள் எப்படி எண்ண முடியும்? வாயில்லாத பிராணிகளுக்குப் பேசத் தெரியுமா? பேசத் தெரியாத கோடிக் கணக்கான பிராணிகளின் சார்பாக தாங்கள் எப்படி மேற்கூறிய அபிப்பிராயத்தை எடுத்துக் கூறமுடியும்? தாங்கள் சொல்வது பொய். கறுப்பு நிறமுள்ள மனிதர்கள், மஞ்சள் நிறமுள்ள மனிதர்கள். வெள்ளை நிறமுள்ள மனிதர்கள், சிவப்பு நிறமுள்ள மனிதர்கள், எல்லோரையும் ஒரு இடத்தில் கூடும்படிச் செய்யுங்கள். நூறு மனிதர்கள் கூடிய பிறகு, அவர்களைப் பார்த்து 'கனவான்களே, துன்பமில்லாத மரணத்தை விரும்புகிறீர்களா, அல்லது மூன்று தினங்கள் கொடிய துன்பத்திற்காளாக விரும்புகிறீர்களா?" என்று தாங்கள் கேளுங்கள். அவர்கள் எல்லோரும், "எங்களை மூன்று தினங்களல்ல, முன்னூறு தினங்கள் வேண்டுமானாலும் துன்பமடையும்படிச் செய்யுங்கள். நாங்கள் ஸஹித்துக் கொள்கிறோம். எங்கள் உயிரை இழக்க நாங்கள் சம்மதியோம்" என்று சொல்வார்கள் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. வாயில்லாத பிராணிகள் மாத்திரம் வேறு அபிப்பிராயம் கொள்ளும் என்று நாம் எப்படி நம்ப முடியும்" என்று அப்பு விளக்கிக் கூறினான். அதைக் கேட்ட தலைவர் அப்புவைத் தண்டிக்காமல் விடுதலை செய்து விட்டார்.

சீவக சிந்தாமணி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உன்மகனின் மனைவியர் எண்பர்; மூளை, உன்மகனுடைய ஆக்கம்; கவலைப்படாதே" என்றான்.

"குருகுலாதிப! அசோகு, முறிந்ததன் பயன் என்ன?" என்றாள் விசயை.

"எனக்கு ஒருதுன்பம் வந்தது: அதுவும் சிறதே; கவலை கொள்ளாதே" என்றான் சச்சந்தன்.

துன்பம் என்ற சொல்லைக் கேட்டதும் விசயை மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தாள்; அரசன், அருகணை வணங்கி, விசயையை எடுத்தணைத்து, "பெண்ணே; கனவு உண்மைப் பயன்தராது; பெண்புத்தி தான் என்னே! வருந்தாதே; நீ வருந்துவது எனக்குத் துன்பத்தைத்தரும்" என்று கூறித்தேற்றினான்.

அரசன் தன் காதல் மொழியாலும், வேறு பேச்சுக்களாலும், விசயையின் மனத்தில் கனவின் நினைவே இல்லாதபடி சில நாட்களில்செய்துவிட்டான்

விசயையும் கனவு மறந்து அரசனோடு இன்பத்தே மதி மயங்கியிருந்தாள்.

அரசன் தன் மனத்தே ஒன்றைச் சிந்தித்து, ஒருநாள் தன் நண்பனான தச்சனைக்கொண்டு ஆகாயத்தில் பறக்கு மயிற்பொறி ஒன்றைச்செய்வித்தான், அதில், பொழுது போக்காக விசயையை ஏற்றி அம்மயிற்பொறியைச் செலுத்தும் விதத்தைக் கற்பித்து வந்தான். விசயையும் மயிற்பொறியை ஊர்ந்து செலுத்துவதையே பொழுது போக்காகக் கொண்டாள்.

"காற்றுடன் போயிற்று" என்ற படத்தில் நடிக்கும் லெஸ்லி ஹவார்டும் விவியன் லேயும்.

பாகத்தில் கெல்லியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டே ட்யூக்கும் டான் என்ரிக்கின் ஆள் ஸாண்டியகோவும் விருந்து நடத்துகின்றனர்.

டிம் கெல்லி வரும் சமயத்தில் ஒரு சச்சரவு ஆரம்பிக்கிறது. சச்சரவை டிம் விலக்கி விடவே அவனிடத்தில் ஸாண்டியாகோவுக்கு அபார ப்ரீதி ஏற்படுகிறது. தனது எஜமானனது தோட்டத்தில் டிம்மும் ஹேஸ்டிங்ஸும் தங்கியிருப்பதற்கு ஸாண்டியாகோ உதவுகிறான். ஏதோ நல்ல காளை மாடுகளை வாங்க அவர்கள் வந்திருப்பதாக அவன் கேட்பவரிடமெல்லாம் கூறிவிடுகிறான்.

ஒரு நாள் லாலிட்டாவிடம் போய், அவளைப் பார்க்க டிம் அங்கு வந்திருப்பதாக ஸாண்டியாகோ கூறியது அவளது ஆவலை எழுப்புகிறது. டான் என்ரிக்கிடம் போய் லூஸிரோ குதிரையை விற்பது பற்றிப் பிரஸ்தாபிக்கிறான், ஆனால் டான் என்ரிக் அதை விற்க சம்மதிக்கவில்லை. இதற்கிடையில் ட்யூக்கும் லாலிட்டாவும் உல்லாசமாகக் காலங்கழிக்கின்றனர்.

அன்றிரவு அர்ஜண்டைனில் பௌர்ணமி. லாலிட்டா டிம்மிடம் ப்ரேமை காட்டுகிறாள். இதற்கப்புறம் டிம் ஹேஸ்டிங்ஸிடம் டான்என்ரிக் குதிரையை விற்க மறுத்து விட்டதைக் கூறி ஊரைவிட்டுக் கிளம்புவது தவிர வேறு வழியில்லை என்று தெரிவிக்கிறான். இந்த சம்பாஷணையை ஒளிந்திருந்த லாலிட்டா முழுவதும் கேட்டு விடுகிறாள். அவனிடம் கோபம் கொண்டு அவனுக்குப் புத்தி புகட்ட அவள் விரும்புகிறாள். அன்றிரவு குதிரை சவாரிக்கு அவனை அழைத்து, தகப்பனார் கோபத்தையும் பொருட்படுத்தாமல் அவற்றைத் திருப்பியனுப்புகிறாள்.

பிறகு ஏலம் நடக்கிறது. அதில் டிம் முதல்தரமான காளை மாட்டை வாங்க நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறான், எதிர்பார்த்ததற்கு விரோதமாக நடக்கிறது. 50000 காசுகளுக்கு டான் என்ரிக் அதை டிம்மிடம் விற்கிறான். இதற்கப்புறம் ஒரு வேடிக்கையும் குதூஹலமும் ஆரம்பிக்கின்றன. கோஷ்டி இரண்டாகப் பிரிகிறது. ஒன்றின் தலைவன் டிம்; மற்றொன்றின் தலைவன் ஆல்பெர்டோ. கேளியாட்டம் நடந்துகொண்டிருக்கும்போது டிம் கக்ஷியைச் சேர்ந்தவன் ஒருவன் ஆல்பெர்டோவை எதிர்பாராதபடி வந்து தாக்குகிறான். இந்தச் செய்கையை யறிந்தும் டிம் குற்றம் செய்தவனை மன்னித்துவிட்டு. பிரக்ஞையற்ற ஸ்திதியில் ஆல்பெர்டோவை வீட்டில் கொண்டு வந்து விடுகிறான்.

டான் என்ரிக் குதிரையை டிம்மிடம் விற்கப்போவதில்லை என்றும், ஆனால் அர்ஜண்டைனை விட்டுப் புறப்பட்டு இனி லாலிட்டாவைச் சந்திப்பதில்லை என்று வாக்குறுதியளித்தால் குதிரையை அவனுக்குக் கொடுப்பதாகவும் கூறுகிறான் லாலிட்டாவும் தன்னை விரும்பவில்லை என்று எண்ணிய டிம், ட்யூக்குடனும், லூஸிரோ என்ற குதிரையுடனும் அங்கிருந்து கிளம்புகிறான்.

இதை லாலிட்டா அறிந்ததும் அவர்களைத் துரத்திக்கொண்டு போகிறாள். குதிரையைக் கொடுக்க முடியாது எனத் தெரிவிக்கிறாள். டான் என்ரிக் தான் கொடுத்ததாக் டிம் கூறுகிறான். குதிரையைக் கொடுக்காவிட்டால் லாலிட்டா தான் தனக்கு சொந்தம் என்கிறான் டிம். இருவரும் திரும்புகின்றனர்; டான் என்ரிக்கின் விருப்பத்திற்கு எதிராக லாலிட்டாவைத் தனக்கு மணம் செய்விக்கும்படி டிம் கட்டாயப்படுத்துகிறான்.

மேற்படி கதையைகொண்ட "அவர்கள் அர்ஜண்டினாவில் சந்தித்தனர்" (They met in Argentina) என்ற ஆர். கே. ஓ. ரேடியோ படத்தில் காதலர்கள் தோன்றுவதுடன் மனோ உலலா ஸமானசங்கீதங்களும்காணப்படுகின்றன. பல அமெரிக்க விளையாட்டுகளும் பார்க்கத் தக்கவை. மரீன் ஓஹாரா லாலிட்டாவாகவும், ஜேம்ஸ் எல்லிஸன் டிம் கெல்லியாகவும், ஆல்பர்டோ விலா, ஆல்பர்டோ டெல் மாண்டியாகவும் ராபர்ட் பர்ராட் டான் என்ரியாகவும் இதில் சிறப்பாக நடித்திருக்கின்றனர். இந்தப் படம் நகரில் எல்பின்ஸ்டன் தியேட்டரில் காட்டப்படும்,

* * * *

வாழ்க்கைப் படங்கள்

அநேகம் படபுரொட்யூஸர்கள் பல பிரபல பெரியார்களது வாழ்க்கைகளைப் படம் பிடித்துக் காட்ட முற்பட்டிருக்கின்றனர் என்பதற்கு ஜெர்ரி லாஸ்கி, பல ஹாஸ்ய நவீனங்களை எழுதிப் பிரசித்திபெற்ற மார்க்ட்வேய்ன் என்பாரது வாழ்க்கை விவரங்களைப் படம் பிடித்துக் காட்ட தீர்மானித்திருப்பது ஒரு அத்தாக்ஷியாகும். மார்க் ட்வேய்ன் மிஸிஸிபி நதியில் ஒரு படகுத் தலைவராக விருந்தது. முதற் கொண்டு அவ்ரது சரிதை விவரம் இப்படத்தில் காட்டப்படும்.

"வடதுருவத்தைச் சேர்ந்த பியாரி" என்பது இந்த மேற்குறிப்பிட்ட ரகத்தைச் சேர்ந்த மற்றொரு படம். வட துருவத்தில் அமெரிக்கக் கொடியை நாட்டுவது சம்பந்தமாக பியாரிக்கும் டாக்டர் குக் என்பவருக்கும் ஏற்பட்ட சச்சரவு இதில் காட்டப்படும். இவர்கள் ஒவ்வொருவரும் அந்தப் பிரதேசத்தைத் தாம் தான் முதலில் கண்டுபிடித்தவர் என்று சண்டை போட்டனர்.

* * * *

வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த படம் :: எக்காலத்தும் சிறந்து விளங்கும் காட்சி.

காஸினோ

பிளாக்கர்ஸ் ரோட்,
மவுண்ட் ரோட்.
போன்: 8476.

குதூகல் ஆரம்பம்

7-2-42உ சனிக்கிழமை

க்ளார்க் கேபிள் - விவியன் லே - லெஸ்லி ஹவார்ட்
ஒலிவியா டி ஹாவிலந்த் - தாமஸ் மிச்சல் நடிக்கும்

GONE WITH THE WIND

இயற்கை வர்ணங்களில்
இப் படம் சென்னையில் இனி ஆறுமாதங்களாவது திரும்ப காண்பிக்கப்படமாட்டாது.
படம்: 3 மணி 40 நிமிஷங்கள் நடைபெறும்.

தினசரி 2 காட்சிகள்: — 3-30 & 8-30 மணி.
சனி, ஞாயிறு, & 13—2—42உ வெள்ளி மூன்று காட்சிகள்—
காலை 9-30, பகல் 3-30 & இரவு 9-30 மணி.

கட்டணம்:—
மேத்தை ரூ. 2-11. கீழ் ரூ. 1-8,
அணா 12 & 6.

இலவச டிக்கட்டுகளும், குறைந்த கட்டணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

டாக்டர் ராகவேந்திரராவ்

நம் நாட்டில் பொது வாழ்வு இன்னும் திருப்திகரமாக உருப் பெறவில்லை என்று தான் கூற வேண்டும். ஒருவர் கக்ஷி மாறினால், கண்ணியமற்றவர் என்று கூறுகின்றனர்: கொள்கையைத் திருத்திக்கொண்டால் காட்டிக்கொடுப்பவர் என்று கருதுகின்றனர். நம் நாட்டில், பெரும்பான்மையோர் விருப்பத்திற்கு விரோதமான புதியதோர் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டுவது விவேகமற்றதாகிறது: காரணம் கூறுவது கஷ்டமல்ல. சுய லாபத்தை உத்தேசித்தே அந்த அபிப்பிராயம் எழும்புகிறது என்கின்றனர் வெகு சுலபமாக! பதவிக்கு ஆசைப்பட்டே மனோ நிலை மாறிவிட்டது என்று முடிவு கட்டுகின்றனர். நாட்டின் நன்மையைத்தான் எல்லோரும் ப்ரதீக்ஷிக்கின்றனர்: இவ்விஷயத்தில் ஒவ்வொருவரும் தம் தம் வழியைப் பின்பற்றுகின்றனர்; கடைப்பிடிக்கும் மார்க்கத்தில் வித்தியாசமே தவிர கருத்தில் இல்லை; மேற்கொண்ட கடமை அனைவருக்கும் ஒன்றுதான்—இந்த மனோபாவம் நம் நாட்டுக் கக்ஷிகளிடையே காணவில்லை. பதவியை பெற்றால் தேசபக்தி மாயமாய்ப்போகிறது என்ற உணர்ச்சியும் இங்கு அதிகம். சமீபத்தில் காலஞ்சென்ற டாக்டர் ஈ. ராகவேந்திர ராவ் பெரிய பதவிகளை வகித்தார்: உயர் பதவி வகித்த இவர் நாடு உன்னத நிலை எய்துவதையே எதிர்பார்த்தார்: பதவி வகிப்பதை விடுதலைப் 'போராட்டத்தின் ஓர் அம்சமாகவே இவர் பாவித்தார். கேந்திர ஸ்தானங்களைக் கிடைத்தபோதெல்லாம் கைப்பற்றி, காரியம் கைகூடும் வகையில் நடந்து வருவதையே இவர் ஆதரித்தார். நிர்வாக சபைக்குள் நுழைந்து நாட்டிற்காக நித்தியமும் சண்டையிட்டார் இவர். திட சித்தமுள்ளவர்: தீர்க்கமாக யோசிப்பவர்: தொடர்ந்ததைத் தைரியமாக நிறைவேற்றி வைக்கும் ஆற்றல் நிரம்பியவர். தமது தேக சுகத்தைச் சிறிதாவது பொருட்படுத்தாமல் இவர் அந்திய காலத்திலும் உழைத்ததே இதற்கு அத்தாக்ஷியாகும். பெரிய ஸ்தானத்தில் இருக்கிறார்: சம்பளத்திற்குக் குறைவில்லை: சுக புருஷர், என்றெல்லாம் இவரைப்பற்றி வெகு சுலபமாகப் பேசிவிட்டனர். ஆனால் இவருக்கிருந்த கவலையையும் இவர் பட்ட கஷ்டத்தையும் இவருடன் நெருங்கிப் பழகியவர் தான் அறிவார்கள்: அவர்கள் தான் அநாவசியக் கூற்றுக்களை ஆக்ஷேபிக்க இயலும்! தாம் ப்ரவர்த்தித்த விஷயத்தில் தளர்ச்சி காட்டியது இல்லை! எதற்கும் பயப்படாத இவரது பிடிவாதம் பிறரைப் பயப்படச் செய்தது! பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் ஆரம்பத்திலிருந்து ஒரே கக்ஷியில் நிலைத்திருக்கவில்லை; அதனால் பெருமைக்குப் பங்கமேற்பட்டதா? நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நாட்டைக் காக்க முன் வரவில்லையா? டாக்டர் ராவ் போன்றவர்கள் மேனாடுகளில் பிறந்திருந்தால் அவர்கள் எவ்வளவோ பெருமை அடைந்திருக்கலாம்: கீர்த்தி பரவி, பெயரும் பிரகாசித்திருக்கும்! நிகரற்ற ராஜ தந்திரி, நிர்வாக நிபுணர் என்றெல்லாம் பிரசித்தி ஏற்பட்டிருந்திருக்கும். நம் நாட்டிலும் காலஸ்திதி மாறி வருகிறது; அபிப்பிராய பேதத்திற்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிட்டு வருகிறது. டாக்டர் ராவ் போன்ற பெரியார்களது ஜீவியத்தின் சிறப்பை நம்மவர் காலப் போக்கில் தான் கண்டு கொள்ளக் கூடும்.

* * * * *

ஜனம் டாக்டர் ராகவேந்திராவ் நாயுடுகாரு 1890-ஆம் வருஷத்தில் பிறந்தார்: இவர் ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவர்: பூர்வீகம் கிருஷ்ண ஜில்லாவில் ஓர் கிராமம்: ஆனால் பிறவி முதல் மத்ய மாகாணத்துடன் தான் இவருக்குத் தொடர்பு இருந்து வந்தது. பிறந்த குடும்பம் பெருமை படக் கூடியதே: கஷ்டமின்றி காலக்ஷேபம் பண்ண வழி இருந்தது. பள்ளிக்கூடப் படிப்பு பூர்த்தியான பின்பு இவர் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு சில வருஷங்கள் தங்கி இவர் பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறினார். 1915-ஆம் வருஷம் மத்ய மாகாணத்திலிருக்கும் பிலாஸ்பூருக்கு இவர் திரும்பி வந்தார்: தொழிலையும் உடனே மேற்கொண்டார். புத்தி தீக்ஷிண்யத்திற்குக் குறைவில்லையாதலால் புகுந்த துறையில் மேன்மையுற முடிந்தது. பொதுவாக நியாய வாதிகளுக்கும் ராஜீயத்திற்கும் ஒருவிதப் பிணைப்பு உண்டு. பொது வாழ்வில் அவர்கள் ஈடுபடுவது மிகவும் சகஜமாகவும் இருக்கிறது. டாக்டர் ராவின் மனமும் ராஜீயத் துறையையே நாடியது. லோகமான்ய திலகர், ஸர் சுரேந்திரநாத பானர்ஜி முதலியோர் நாடெங்கும் சுதந்திர உணர்ச்சியை உண்டாக்கி வந்த காலம் அது: தங்களது பிரசங்கங்கள் மூலம் பாமர மக்களைத் தட்டி யெழுப்பிய காலம் அது. இவரும் இந்தத் தலைவர்களிடம் ஆகர்ஷிக்கப்பட்டார்: காங்கிரஸ் கக்ஷியிடம் சிரத்தா பக்தி உதயமாகியது: அந்தக் கோஷ்டியில் சேர்ந்தால் அபீஷ்டம் சித்தி பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது இவருக்கும். ஆகவே பூர்வாங்கப் பயிற்சிபெற இவர் வழி தேடினார்: ஸ்தல சுயவாட்சி முறையில் இவர் மனம் சென்றது: ஜில்லா போர்டிலும் நகர சபையிலும் ஸ்தானமேற்றார்: இவற்றின் தலைவராகவும் இவர் சோபித்தார். இந்த நாளில் நகரத்தைப் பற்றிய விஷயங்களில் இவர் சிரத்தை அதிகரித்தது. நகர பரிபாலனத்தில் விழுந்த நாட்டம் நாட்டின் பரிபாலனத்திற்கு உதவவும் தூண்டியது. சுமார் பத்துவருஷ காலத்திற்கு இவ்விதம் இவர் நயமாகத் தம் காரியத்தை நடத்தி வந்தார், இஃது இவ்வாறிருக்கையில் திலகர் 1920-ம் வருஷ மத்தியில் காலமானார்: மகாத்மாஜி உடனே நாட்டின் தலைமையை ஸ்வீகரித்தார்; ஒரு வருஷ காலத்திற்குள் சுயராஜ்யம் சம்பாதித்துத் தருகிறேன் என்று அவர் உறுதிகூறினார்: தமது ஒத்துழையாமையை அனுஷ்டித்தால் அது சாத்தியம் என்றும் வற்புறுத்தினார். ஆகவே நாட்டிலிருந்தோர் யாவரும் மகாத்மாவின் சட்ட மறுப்பு இயக்கத்தை வரவேற்றனர். சுதந்திரம் பெற அவ்வளவு ஆவல் இருந்தது! இயக்கம் ஆரம்பித்ததும் அடக்கு முறையும் ஆரம்பமாகியது: தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராய்ச் சிறை புகுந்தனர். மத்ய மாகாணத்தில் பிரபல காங்கிரஸ் வாதியாயிருந்த டாக்டர் ராவும் சிறை புகுந்தார், சிறை வாசம் சொற்ப காலம்தான் ஆயினும் சிறப்புக்குக் குறைவில்லை. வெளியே வந்ததும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை வகித்தார்: தொழிலிலும் பெருமை பரவியது.

* * * * *

மாண்டேகு—செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் வந்த காலம் முதற் கொண்டே, இரட்டையாட்சி முறையை நடத்துவதா அல்லது நிராகரிப்பதா என்பதே காங்கிரஸ் மஹா சபை முன் நின்ற பிரச்னை. 1922-ம் வருஷத்திய காங்கிரஸ் மஹா சபைக் கூட்டத்தில் சட்டசபைக்குள் காங்கிரஸ் பிரவேசிக்க வேண்டும் என்பது ஆதரிக்கப்பட்டது: தேசபந்து தாஸ், பண்டித மோதிலால் நேரு முதலியோர் இந்த நோக்கத்துடன் ஸ்வராஜ்யக் கக்ஷியை ஆரம்பித்தனர்: மகாத்மாவுக்கு இது பூரண சம்மதியில்லை: ஆயினும் புதிய கக்ஷியை ஸ்தாபிப்பதில் அவர்கள் மும்முரமாக முனைந்தனர். 1923-ம் வருஷத்திய தேர்தலில் காங்கிரஸ்காரர் போட்டியிட முடிவு செய்யப்பட்டது; ஸ்வராஜ்யக் கக்ஷி அபேக்ஷகர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டனர். புதிய கக்ஷித் தலைவரான தேசபந்து தாஸ், ஹக்கீம் அஜ்மல் கான், ஸ்ரீ கேல்கர், ஸ்ரீ வி. ஜே. படேல், லாலா துனிசந்த், ஸ்ரீ ராகவேந்திர ராவ், ஸ்ரீ எ. ரங்கஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ டி. ஆர் பூக்கன். பண்டித மோதிலால் நேரு, ஆகியவர்களைக் கக்ஷியின் நிர்வாகக் கமிட்டிக்கு நியமித்துக் கொண்டார். 1924-ல் மத்ய மாகாணத்தில் சட்டிஸ்கார் தொகுதியின் பிரதிநிதியாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்ய மாகாண சட்டசபையில் இவர் தமது கக்ஷியின் பலத்தைக் கொண்டு, ஸர்க்காரை அடிக்கடி உபத்திரவித்து வந்தார். ஸ்வராஜ்யக் கக்ஷி கையாண்ட எதிர்ப்பு முறை அதிக பலனைத் தந்தது: ஸர்க்கார் கோரிய மான்யம் முதலியன யாவும் நிராகரிக்கப்பட்டன. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உத்திரவுப் பிரகாரம் இவர் சட்டசபையை விட்டு தமது கக்ஷியாருடன் வெளியேறினார். இதற்கிடையில் மாகாண கவர்னருக்கு அதிக கவலை ஏற்பட்டது. நிர்வாகம் தடைப்படுவது அவரைப் பெரிதும் வருத்தியது. 1925-ம் வருஷம் மே மாதத்தில் கவர்னர் ஸர் மாண்டெகு பட்லர் ஸ்ரீ ராவையும் டாக்டர் மூஞ்ஜேயையும் அழைத்து, மந்திரிசபை அமைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். இருவரும் இதற்கு இணங்கவில்லை; ஆனால் இதே வருஷம் அக்டோபர் மாதம் ஸ்வராஜ்யக் கக்ஷியைச்சேர்ந்த ஸ்ரீ தம்பே நிர்வாக சபை மெம்பர் பதவியை ஒப்புக்கொண்டார். இது எங்கு பார்த்தாலும் கலவரத்தையே உண்டாக்கியது. இதனால் ஸ்வராஜ்யக் கக்ஷிக்குள்ளேயே அபிப்பிராயபேதம் ஏற்படலாயிற்று. பண்டித மோதிலால் நேரு இதைக் கண்டித்தார். ஆனால் டாக்டர் ஜயகர் முதலியோர் இதைஆதரித்தனர். வெறும் எதிர்ப்பு மட்டுமே பயன்தராது, ஸ்வராஜ்யக் கக்ஷி கூடிய வரை ஸர்க்காருடன் ஒத்துழைத்து லாபம் பெற வேண்டும் என்றனர் ஜயகர் கோஷ்டியார். இவ்வாறு கக்ஷிக்குள் கக்ஷி முளைத்தது; பதவி யேற்பதற்கு ஒரு சாரார் ஆதரவு பிறந்தது.

* * * * *

ஸ்ரீ ராவ் டாக்டர் ஜயகரின்கருத்தை முழுமனதுடன்வரவேற்றார் பதவியை வகித்து பொறுப்பேற்று நடப்பது பலன் தரும்: என இவர் நம்பினார். ஆகவே 1927-ம் வருஷம் ஜனவரி மாதம்

"கே. எஸ். ஆர்." எழுதியது

12-ம் தேதி ஸ்ரீ ராவ் பிரதம மந்திரியானார்: மற்றொரு மந்திரி ஸ்ரீ ஆர். தேஷ்முக். முதல் மந்திரி கதர் தான் அணிந்திருந்தார் பதவியேற்ற தினம்: சட்டசபையில் இவர் தாம் பதவியேற்க சம்மதித்த தன் காரணத்தையும் விளக்கினார். "எங்கள் நடவடிக்கையைக் கண்டிக்க ஸ்வராஜ்யக்கக்ஷிக்குப் பூரண உரிமை உண்டு. சீர்திருத்தங்களை அமுலாக்குவது தான் வாக்காளர்கள் விருப்பம் ஆகவே தான் நாங்கள் பதவியேற்றோம். எங்கள் அதிகாரத்திலோ காரியத்திலோ, பொறுப்பிலோ குறுக்கிடுவதில்லை என்று கவர்னர் வாக்குறுதி அளித்திருக்கிறார்; இதற்குப் பாதகம் ஏற்படுகிறது என்று எந்த க்ஷணம் எங்களுக்குத் தெரிகிறதோ, உடனே நாங்கள் பதவியை உதறித்தள்ளிவிடுவோம். சம்பளத்தில் எங்களுக்குக் கருத்தில்லை: சபை முடிவையே நாங்கள் பின் பற்றுவோம். தேசத்திற்காக உழைப்பவர்கள் தேசத்தின் மூலம் லாபமடையக்கூடாது என்பதே எங்கள் லக்ஷியம்: இந்த லக்ஷியத்தை விட்டு நாங்கள் ஒருபோதும் வழுவமாட்டோம்" தமது மாகாணத்தின் நலனை நாடியே இவர் மந்திரியானார். சில மாதங்களுக்குள் இவருக்கும் இவரது சகாவுக்கும் அபிப்பிராய பேதம் வலுத்தது. 1928-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் ஸ்ரீ தேஷ்முக் ராஜிநாமாச்செய்தார்: ஆகவே இவரும் பதவியை விட்டு விலகவேண்டியதாகியது. ஆனால் ஒரு வாரத்திற்குள் இவர் மறுபடியும் பிரதம மந்திரியானார்: ஸ்ரீ கேதார் மற்றொரு மந்திரியாக இருக்கச்சம்மதித்தார். சுமார் நான்கு மாதகாலத்திற்கு நிர்வாகம் திருப்திகரமாக நடந்தது. தாம் தயாரித்த மசோதாவில் சட்டசபையார் செய்த திருத்தம் தமது கருத்துக்கு விரோதமாகிவருகிறதென்று ஸ்ரீ கேதார் கோபம் கொண்டார். இந்த நிலைமையில் மந்திரியாக இருக்க அவர் விரும்பவில்லை: விட்டுவிலகவே அவர் ஆசைப்பட்டார். 1929-ம் வருவும் ஜனவரி மாதம் இரண்டாவது விசை ஸ்ரீ ராவ் ராஜிநாமாச் செய்யநேர்ந்தது. இந்த ராஜிநாமா காரணமாக இவரது மந்திரிசபை பேரில் சட்ட சபையில் வர விருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபீஸாகியது. மாற்றிக்கொடுக்கப்பட்ட இலாகாவின் நிர்வாகத்தையும் கவர்னரே மேற்கொண்டார்.

* * * * *

இதற்கப்புறம் சட்டசபையில் ஜன நாயகக் கக்ஷியின் தலைவராக ஸ்ரீராவ் இருந்து, ஸர்க்காரின் முயற்சிகளை அவ்வப்போது எதிர்த்து வந்தார். 1930-ம் வருஷ முடிவில் ஸ்ரீ தம்பே நிர்வாக சபையிலிருந்து விலகவே அந்த ஸ்தானம் ஸ்ரீ ராவுக்கு அளிக்கப்பட்டது. சட்டமெம்பராக இவர் பதவி வகித்தார்: சுமார் ஆறு வருஷத்திற்கதிகமாகவே இந்த ஸ்தானத்தில் இவர் இருந்தார். இவர் மாகாணத்திற்கு செய்த நன்மை அதிகம். கடன் சமரஸச் சட்டம், லேவா தேவிக் காரர் சட்டம், அதிக வட்டி விகிதச் சட்டம் ஆகியவற்றை யெல்லாம் நிறைவேற்றி வைத்து, கஷ்டப்படுவோருக்கும் ஏழைகளுக்கும் இவர் உதவி புரிந்தார். மத்ய மாகாணத்தில் ஒரு ஹைக்கோர்ட் ஸ்தாபிதமானதற்கு இவர் தான் பிரயாசைப்பட்டார். இவர் முழுமனதுடன்முன் வந்திரா விட்டால் காரியம் கை கூடியிருந்திருக்காது. வாதத்தில் நிபுணர்: எழுப்பும் பிரச்னைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதில் திறமை மிகுந்தவர்: பயமின்றி பேசுவதில் தீரர்: புஸ்தகப் படிப்பும் மட்டிலாதது: ஆகவே இவரிடம் மாகாணம அதிக மதிப்பு கொண்டது: இவரது நடதனதயும் நேர்மையானது. எதிர்கக்ஷிக்காரரும் இவரை விசுவாசத்துடன் பாராட்டினர்.

* * * * *

1936-ம் வருஷம மத்ய மாகாண கவானர் ஸர் ஹைட் கவன் நான்கு மாத ரஜாவில் தாயகம் சென்றார். அப்போது ஸ்ரீ ராவ் மாகாணத்தின் ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்டார். எல்லாவற்றிற்கும் மேலான பதவி கிட்டியது. பதவியேற்ற காட்சி பார்த்தவர்களுக்கு மகிழ்ச்சி தந்தது. கதருடையில் கவர்னர் இருந்த காட்சி கண் காணு விருந்தாக இருந்தது. கதர் "ஜிப்பா" கதர் குல்லாய், கதர் வேஷ்டி-கவர்னராக அதிகாரமேற்ற தினத்தன்று இவற்றைத்தான் ஸ்ரீ ராவ் அணிந்திருந்தார். மிகவும் துணிச்சலான காரியத்தைத் தான் செய்தார்: நாடு முழுதும் கொண்டாடியது: எங்கும் இதே பேச்சு! ஸ்ரீ ராவின் மனோதிடமும் இதனால் வெளிப்பட்டது, அஞ்சா நெஞ்சம் படைத்தவர் இவர் என்பதும் உறுதியாயிற்று. பழைய சம்பிரதாயங்களையெல்லாம் மாற்றிவிட்டார்: கவர்னர் மாளிகையில் கட்டுப்பாடின்றி வெகு சகஜமாக நடந்துகொண்டார். லார்ட் ஸின்ஹா கவர்னராயிருந்த காலத்தில் அவருக்கு "ரஸ குல்லாக்கள்" கிடைக்கவில்லை: தமது மாளிகையில் அவற்றை அவர் தயாரிக்க முடியவில்லை: விதி விபரீதமாகக் குறுக்கிட்டது; காரியதரிசியைத் தட்டிக் கொடுத்து அந்த தின்பண்டத்தை அவர் தருவிக்கும்படி நேர்ந்தது: இவவாறு சில வரையற்றைகளுடன் காலம் தள்ளுவது அவருக்குக் கஷ்டமாகிவிட்டது: கடைசியில் பதவியைத் துறந்து விட்டு சுகமாக வாழலாமென்று வெளியே வந்தார் அவர். ஸ்ரீ ராவ் இவற்றை யெல்லாம் அறிவார்: அனுபவம் அறிவைப் பெருக்கியது: அகாரணமான விதியை எதிர்த்து நிற்கக் கங்கணம் கட்டிக்கொண்டார்: இவ்வாறு சங்கல்பித்துக் கொண்ட இவரை எவர் எதிர்க்க முடியும்? தாம் வைத்தது தான் சட்டம் என்றபடி ஸ்ரீ ராவ் நடந்துகொண்டார்,

* * * * *

நிர்வாக சபையிலிருந்து நீங்கிய பின்பு இவர் மாகாண ஜனப்பிரதிநிதி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1937-ம் வருஷம் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் கக்ஷிக்கு அதிக பலம் கிடைத்தது, அவ் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் மாகாண சுயவாட்சி அமுலுக்கு வந்தது: ஆரம்பத்தில் சில தகராறுகள் காரணமாக, காங்கிரஸ் கக்ஷி மந்திரி சபையை அமைக்க மறுத்துவிட்டது, தற்காலிக மந்திரி சபைகள் நிறுவப்பட்டன: மத்ய மாகாணத்தில் ஸ்ரீ ராவ் பிரதம மந்திரியானார்: மூன்று மாதகாலம் வேலை பார்த்தார். நிர்வாகம் நிர்விக்கினமாக நடைபெற உதவினார். காங்கிரஸ் கக்ஷி பதவியேற்றதும் இவருக்கிருந்த பதவி போயிற்று. அதிகாரம் வகித்த கக்ஷிக்கு எதிராக சட்ட சபையில் வாதாடினார். இத்தகைய திறமை வாய்ந்தவர் காங்கிரஸை விட்டு விலகியிருக்கலாமா என்று பலர் கவலை காட்டினர்: திரும்பவும் அழைத்துப் பார்த்தனர்: வந்து சேர மறுத்துவிட்டார். 1939-ல் ஸர் ராமஸாமி முதலியார் வைஸ்ராய் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டார். அப்போது இவர் அவருக்குப் பதிலாக லண்டனில் இந்தியா மந்திரியின் ஆலோசனையாளராகப் பதவி யேற்றார். இந்த ஸ்தானத்தில் ஸ்ரீ ராவ் சுமார் இரண்டு வருஷகாலம் இருந்தார். யுத்தகால லண்டன்: எங்கு பார்த்தாலும் வெடிகுண்டு வீச்சு: இவற்றின் நடுவில் இவர் தமது காலத்தைக் கடத்திவந்தார். இத்தகைய வாழ்க்கை இவரது தேக சுகத்தைக் கெடுத்துவிட்டது: இதனால் மனக் கசப்பு கொஞ்சமும் ஏற்படவில்லை: கடமையில் இருந்த கருத்து கஷ்டத்தை வெளிக்காட்ட மறுத்தது. இவர் லண்டனில் இருக்கையில் ஸேத் ஜமன்லால் பஜாஜ் இவருக்கு ஒரு கடிதம் எழுதினார். ஜயப்பூர் சமஸ்தான திவான் பதவியை இவர் ஏற்றுக்கொண்டால் அது மகாத்மாஜிக்குத் திருப்தி தரும் என்று ஸேத்ஜி குறிப்பிட்டார். மகாத்மாவின் ஆமோதம் பெற்றே அக்கடிதம் எழுதப்பட்டது. இவர் அந்தப் பதவியை ஏற்க விரும்பவில்லை.

* * * * *

1941-ம் வருஷம் ஜூலை மாதம் வைஸ்ராய் நிர்வாக சபையில் ஸிவில் பாதுகாப்பு இலாகா மெம்பர் பதவியை ஏற்கும்படி இவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது: அழைப்பை தாமதமின்றி ஏற்றுக்கொண்டார்: தயக்கமின்றி தாய் நாட்டிற்குத் திரும்பினார். ஆகாய விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்தார். பிறந்த நாட்டிற்குப் பணி செய்வதில் இவருக்கு அவ்வளவு ஆவல் இருந்தது! இந்தியா மந்திரி சபையில் போராடியது போல, ராஜப்பிரதிநிதி சபையிலும் சண்டை போடலாம் என்பதே இவருக்குப் பிரதானமாக இருந்தது. கிடைத்த அதிகாரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, மேலும் மேலும் பிடுங்க வேண்டும் என்பதே இவரது கக்ஷி: இவர் பெரிய காரிய வாதி என்று தான் கூற வேண்டும். புது டில்லியிலும் இவர் சிறப்பாகவே நடந்து கொண்டார்: ஸர்க்கார் பதவி வகித்த போதிலும் தேச பக்தியில் இதரர்களுக்குக் குறைந்தவரல்ல என்பதை நிரூபித்து விட்டார். ராஜீயக் கைதிகளின் விடுதலைக்கு இவர்தான் காரணமாயிருந்தார்: ஸர் ரெஜினால்ட் மாக்ஸ்வெல்லுடன் இவர் நடத்திய பலமான வாக்கு வாதமே தேசீயவாதிகளின் கோரிக்கை பூர்த்தி பெறச்செய்தது. சமீபத்தில் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவுக்குத் தூது வந்தபோது, அவர் இவரையும் தம்முடன் சம்பாஷிப்பதற்காக அழைத்தார். ஸ்ரீ ராவ் நீண்ட நேரம் அவருடன் பேசினார்: பாதுகாப்பு இலாகா பூராவும் இந்தியரிடமே ஒப்படைக்க வேண்டும் என்றார் இவர்: தமது கொள்கைக்கு சரித்திர பூர்வமான ஆதாரம் காட்டினார்: ராணுவ அதிகாரம்பற்றி கர்ஸனுக்கும் கிச்சினருக்கும் ஏற்பட்ட தகராறையும் விளக்கி, ராணுவ இலாகா சட்டசபையின் வரம்புக்கு மீறி இருக்கக்கூடாது என்பதை வற்புறுத்திச் சொன்னார். இவ்வளவு ஆணித்தரமாக இவர் கூறியது ஸர் க்ரிப்ஸுக்குக் கோபத்தை விளைவித்தது: இவர் தேசீயக் கக்ஷியை ஆதரித்ததால் அவர் பொறுமை இழந்தார். கடைசியில் அவர் "நீங்கள் கூறியது போதும், போய் விட்[illegible]லாம்" என்று சொன்னார். உடனே ஸ்ரீ ராவுக்குக் கோபம் பொங்கி எழும்பிவிட்டது. ஸ்ரீ ராவ் தாம் இந்த பேட்டியை நாடவில்லையென்றும், அழைப்புக்கிணங்கியே வந்ததாகவும், இனியாவது கண்ணியமாக நடந்துகொள்ளக் கற்பது உசிதமாகும் என்றும் ஆத்திரத்துடன் கூறிவிட்டுத் திரும்பிவிட்டார். தாக்ஷிண்யமற்ற இவரது ஸ்வபாவத்தை எடுத்துக்காட்ட இது போதும்! இம்மாதிரி பொதுமக்கள் சார்பில் இவர் பெரிய அதிகாரிகளுடன் அடிக்கடிப் போராடியதாக விஷயமறிந்தவர் கூறுகின்றனர்: ஆனால் விஷயமறியாதார் பதவிமோகம் பிடித்துப் பிராபல்யம் பெற இவர் விரும்பினார் என்றே கருதுவர். தாம் இந்நாட்டுக்கு வந்தது முதல் இந் நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் அதிக அக்கரை காட்டினார்: பொறுப்பு மிகுந்த வேலை இவருக்குப் பாதகத்தையே புரிந்தது: இங்கு திரும்பும்போதே நோயுடன் இருந்த இவரது தேக நிலை இதற்கப்புறம் அடியோடு சீர்குலைந்து போயிற்று: வியாதியும் முற்றிவிட்டது: அது அகால மரணத்தில் முடிந்தது: இன்னும் எவ்வளவோ நாட்டுக்கு சேவை செய்யக் கூடியவர் தமது 52-ம் ஆண்டில் காலமானார்: சொந்த ஊர் திரும்பி பதவியை ராஜ்நாமாச்செய்ய இவர் எண்ணினார். ஆனால் காலன் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

* * * * *

ஸ்ரீ ராவ் கௌரவத்திற்கு ஆசைப்படவில்லை: ஆனால் 1937-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஆந்திரா சர்வகலாசாலையார் இவருக்கு அளித்த "டாக்டர்" பட்டம் இவருக்குத் தந்த திருப்தி அளவுக்கடங்காது. டாக்டர் ராகவேந்திர ராவின் வாழ்க்கையில் உயர்ந்த லக்ஷியத்தைக் காணலாம்: சேவையை மதிப்பிட தியாகம் மட்டுமே அளவுகோலாகாது. எந்த விதத்தில் தொண்டு புரிந்தாலும் அது போதும் என்பதற்கு இவரது வாழ்க்கை ஒரு நிதர்சனமாகும்.

சிறுவர் கதை

பணப் பித்தன்

"ஶிவன்" எழுதியது

விஜய நகர் சாம்ராஜ்யத்தில் ராயவரம் என்ற ஊர் ஒன்று இருந்தது. அந்த ஊரில் ஒரு பெரிய வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் பெரிய பணக்காரர். அவருக்கு மளிகை கடை ஒன்று உண்டு. அவரிடத்தில் வியாபாரம் பண்ணும் குடி ஜனங்கள் எதிரில் பல்லைக்காட்டியும், பின்னால் வாய்க்கு வந்தவாறும் திட்டுவார்கள். அவ்வளவு கஞ்சத்தனம் படைத்தவர். லோபி என்றுகூடச்சொல்லலாம். பிச்சைக்காரர்கள் அவர் வீட்டண்டை வந்து பிச்சை கேட்டால், வாயில் வந்தவாறு திட்டுவார்: அதற்கும் அசையாமல் நின்றால் கழி கொண்டு அடிப்பார். அதனால் பிச்சைக்காரர்கள் கூட அவர் வீட்டண்டை நெருங்கமாட்டார்கள். அப்படிப்பட்ட தர்மப் பிரபு!

ஊரில் பஞ்சம் ஏற்பட்டது. விலைவாசியெல்லாம் ஏறிவிட்டது. விவசாயிகளுக்கும் கஷ்டம் நேர்ந்தது. மழையும் பெய்யவில்லை. குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. இந்த வியாபாரியோ கடையிலும் வீட்டிலும் ஏராளமான தானியங்களை மூட்டை மூட்டையாக அடுக்கி வைத்திருந்தார். இன்னும் விலை ஏறும், அப்பொழுது விற்கலாம். நிறைய லாபம் கிடைக்கும் என்றிருந்தார். ஜனங்கள் பசிப்பிணியைத்தாங்க முடியாமல் எல்லோரும் ஒன்று கூடி வியாபாரியிடம் வந்து முறையிட்டார்கள். "செட்டியாரே, கையிலோ காசில்லை. எங்கள் பசியைப் போக்கவும் மார்க்கம் தோன்றவில்லை. எங்கள் மேல் மனமிறங்கி உணவு பண்டம் கடன் கொடு. விளைவு விளைந்தால் கொடுத்துவிடுகிறோம்" என்று கேட்டார்கள். வியாபாரி பல்லைக் கடித்துக்கொண்டு கோபத்தோடு "கழுதைகளே, கையில் காசில்லையானால் கடன் கொடுப்பார்களா? கழுத்தை முறுக்கிக் கொண்டு சாகிறதுதானே! கழுதைகளே உங்கப்பன் வீட்டு சரக்கா உங்களுக்கு எடுத்து கொடுக்க! எங்கப்பன் வீட்டுச் சரக்கு என் வீட்டிலே இருக்கிறது போங்கடா!' என்று கடுஞ் சொற்கள் சொல்லி விரட்டினார். ஏழைகள் வயிறு எரிய மனம் நோக அவர்கள்வீட்டுக்குச் சென்றனர்.

ஆண்டவன் இக்கொடுமையை எத்தனை நாளுக்கு தான் சகிப்பார். ஒரு நாளைக்கு. மனமிரங்கி சுபிட்சத்தைச் செய்யமாட்டாரா? அக்காலம் நெருங்கி விட்டது. வானம் இருண்டது: மேகம் கூடியது. மேகத்தைப் பிளந்து கொண்டு மின்னல் கிளம்பியது. மழையும் 'சோ' என்று கொட்டியது. நடு நடுவே இடியும் இடித்தது. ஒரு பிரம்மாண்டமான சப்தத்துடன் இடி ஒன்று வியாபாரியின் வீட்டின் மேல் விழுந்தது. வீடும் இடிந்து தரைமட்டமாகியது. அரிசி மூட்டைகளெல்லாம் நனைந்து போயின. ஜனங்களெல்லாம் இடி விழுந்த இடத்தை வந்து பார்த்தனர். வியாபாரிக்கு உதவி புரிய ஒருவரும் முன் வரவில்லை. சிதறிக் கிடக்கும் மூட்டைகளை எடுத்துக் கொண்டு வீடு சென்றனர். வியாபாரிக்கு பெருத்த நஷ்டம்! உணவுப் பொருள்களெல்லாம் அழிந்து போயின வீடும் இடிந்து விட்டது. தன் மனைவியும் அதில் சிக்குண்டு இறந்து போனாள். தன் வயிற்றுக்கே தாளம் போடுகிற நிலைமையில் வந்து விட்டார்.

மக்கள் வறுமை ஒழிந்தது. பஞ்சப்பிணி பறந்தோடியது. எங்கு பார்க்கினும் கதிர்கள் பச்சைப் பசேலென்று தெரிகின்றன. வியாபாரிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. பசிப்பிணியும் தொடங்கி விட்டது. மக்கள் மரபில் வாழப் பார்த்தார். இவருடைய கஞ்சத்தனம் மக்களின் மனக் கொதிப்பைக் கிளப்பிவிட்டது. வியாபாரி எங்கு போனாலும் துரத்தலானார்கள். யாராவது ஒரு பிடி அன்னம் கொடுத்தால்தானே? யாரும் ஒரு பிடி அன்னம் கூட கொடுக்க முன் வரவில்லை. தன் தவறை தானே அறிந்துகொண்டார். தனக்கு இதுவே பிராயச் சித்தம் என்று மனதில் திடம் கொண்டார். ஆனால் பணப்பித்து மாத்திரம் அவரை விட்டு அகலவில்லை. கடைசியில் ஊருக்கு வெளிப்புரத்தில் இருக்கும் புளிய மரத்தில் பிணமாகக் கிடந்தார். இன்னும் அவருடைய பேய் ரூபம் 'பணம் பணம்' என்று கத்திக்கொண்டு இருக்கிறதாம்.

நாங்கள் இதை தயாரிக்க உதவுகிறோம். இது எவ்வளவு சிறந்தது என்பதை அறிவோம்.



S. 46—460 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினாலும் சரி, கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச் சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள், தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே. கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங்கூந்தலைப் பெறுங்கள். சிறுவயதுமுதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேல் செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.



உஷ்ண — காலத்திய பாத உபத்திரவங்களுக்கு தினசரி இரவு தவறாமல் ஜாம்பெக் தடவுங்கள்.

கோடை காலத்தில் பாதம் வீங்கி புண்பட்டிருக்கும். தினசரி இரவு ஜாம்பெக் தடவி கால்களை சரிவரவைத்திருங்கள். ஜாம்பெக்கிலுள்ள அற்புத மூலிகை சத்துக்களை சருமம் இழுத்துக்கொள்வதால் வலி, வீக்கம் குறைந்து ரணம் ஆறும். பித்தவெடிப்பு முதலியவையும் சீக்கிரம் குணமாகும். கால்கள் திரும்பவும் ஆரோக்யமாக மாறும். விலை ரூ. 1 அல்லது 2-4. எல்லா மருந்து வியாபாரிகளிடமும், ஏஜண்டுகள் :—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

கவலை வேண்டாம்

உங்கள். வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர் மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கே.சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

அரிய தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.
வைதேகி	2	8
பத்மசுந்தரன்	2	8
சாருலோசனா	2	8
காதலின் கனி	2	8
ராதாமணி	2	8
தியாகக் கொடி	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0
சாமளநாதன்	2	0
மங்களபாரதி	2	0
சண்பகவிஜயம்	1	12
கௌரீமுகுந்தன்	1	12
ஸாரமதி	1	12
தயாநிதி	1	12
உணர்ச்சி வெள்ளம்	1	8
சந்தோஷமலர்	1	8
சோதனையின் கொடுமை	1	8
ராஜமோகன்	1	4
அனாதைப்பெண்	1	4
இன்பஜோதி	1	4
வானக்குயில்	1	4
கஸ்தூரி திலகம்	1	4
கானல் நீர்	1	4
புகழ்மாலை	1	4
கலா நிலையம்	1	4
ஜீவியச் சுழல்	1	4
ஆத்மசக்தி	1	4
உத்தமசீலன்	1	4
பரிமளகேசவன்	1	4
பிச்சைக்காரக் குடும்பம்	0	8
கருணாலயம்	1	0
சாந்தகுமாரி	1	0
மாய ப்ரபஞ்சம்	1	0
சந்திரமண்டலம்	1	0
புத்தியே புதையல்	0	14
கதம்பமாலை	0	12
பட்டமோ பட்டம்	0	10
மகிழ்ச்சி உதயம்	0	10
ஆனந்தஸாகர்	0	8
வீரவஸந்தா	0	8
நளினசேகரன்	0	8
மூன்று வைரங்கள்	0	8
வத்ஸகுமார்	0	8
படகோட்டி	0	8
மாலதி	0	8

சுதேசமித்திரன்
புத்தகசாலை, சென்னை.

வி.எச்.ஆர் வருங்காயம்

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

இஸ்லாமிய நூல்கள்

மஹான் முகம்மது நபி	0	8	0
அபுபக்கர் ஸித்திக்	0	12	0
உமரே பாரூக்	1	0	0

முஸ்லீம் வாசகம், 1-5 வகுப்புவரை கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

இனம் வைத்திய வித்தை

பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்லசந்ததிக்கும் வழி

மதன மஞ்ஜரி பார்மஸி,
184 சைனா பஜார், மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.—Editor, C.R. Srinivasan, B.A.